# TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்

## TNEB EMPLOYEES' FEDERATION NEWS

Volume -2 Issue - 10 May 2020 | Monthly Magazine | Bilingual | Price - Rs.10/-

மலர் - 2 இதழ் - 10 மே 2020 | மாத இதழ் | Tamil & English | விலை ரூ. 10/-

ஆசிரியர் : அ.சேக்கிழார்




**18.05.2020 அன்று தொழிற்சங்க கூட்டுக்குழு சார்பாக சென்னை தலைமை அலுவலக வாயிலில் நடைபெற்ற கோரிக்கை ஆர்ப்பாட்டம்**




**தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் வெளியீடு**













# 18.05.2020 அன்று தொழிற்சங்க கூட்டுக்குழு சார்பாக நடைபெற்ற கோரிக்கை ஆர்ப்பாட்டம்
























**TNEB**
**எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**

மலர்-2 ✧ இதழ்-10 ✧ மே 2020

நிர்வாக ஆசிரியர்
**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு
**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**S. இராமநாதன்**
**K. செல்வராஜு**
**R. ஜெயராமன்**
**வீ. பாரதி**

செயலாளர் (வெளியீடு)
**A. செந்தில்குமார்**

39/101, சிங்கண்ண தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com

# மின்சார சட்டம் திருத்தம் 2020ஐ திரும்ப பெறுக!

கொரோனா தொற்று வீரியமிக்கதாக உலவி வரும் நேரத்தில் தான் மத்திய அரசு மின்சார சட்ட திருத்தம் 2020ன் மீதான கருத்துக் கேட்டதை நிறுத்தி வைத்திடக் கோரி அனைத்து தரப்பு ஆட்சேபணையும் மத்திய அரசின் வேகத்தை குறைத்ததோ இல்லையோ ஜூன் 2ம் தேதி வரை தள்ளி வைத்துள்ளது.

தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் அவர்கள், இன்ன பிற அரசியல் கட்சித் தலைவர்கள், பல்வேற நல அமைப்புகள், விவசாய குடிமக்கள், மின்சாரத் தொழிலாளர்கள் என அனைவரது தரப்பிலும் மின்சார சட்ட திருத்த மசோதா 2020ஐ திரும்ப பெற வேண்டும், மாநில உரிமையை பறிக்கக் கூடாது, பொதுத்துறையிலே தொடர வேண்டுமென பலமான எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

மின்சாரத் தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் என அனைவரும் கடந்த 18.05.2020லும், 22.05.2020லும் தமிழகம் முழுவதும் மின்சார சாரிய அலுவலங்களில் கண்டனக் குரல் எழுப்பி தொழிலாளர்களின் ஒற்றுமையை தொழிற் சங்கங்களின் கூட்டு சக்தி மூலம் பதிவு செய்துள்ளோம்.

எதிர்வரும் ஜூன் 1ம் தேதி தேசிய மின்சாரத் தொழிலாளர்கள் மற்றும் பொறியாளர்கள் ஒருங்கிணைந்த குழுவின் (NCCOEEE) சார்பாக மின்சார சட்ட திருத்த மசோதா 2020ஐ எதிர்த்து கருப்பு அட்டை அணிந்து கோரிக்கைகளை முழங்குவது என தீர்மானிக்கப் பட்டுள்ளதை முழுமையாக செயல்படுத்திடுவோம்.

நாடு எந்த திசையில் சென்று கொண்டிருக்கிறது என்று ஆட்சி யாளர்களுக்கு புரிந்தோ அல்லது தெரிந்தோதான் நடக்கிறதா என்பதும் நமக்கு புரியாமலேயே உள்ளது.

ஈட்டிய விடுப்பை பணமாக்க முடியாதாம், பொது வைப்பு நிதிக்கு வட்டி குறைப்பாம், ஓய்வு பெறும் வயதை நீட்டிப்பாம், அகவிலைப்படி கிடையாதாம்.

கொரோனாவை பயன்படுத்தி நாட்டை வீழ்ச்சிக்கு கொண்டு செல்ல எத்தனிக்கிறார்கள் போல் தெரிகிறது.

**தினசரி ஒரு சட்டம் வருகிறது. இதற்கெல்லாம் கொரோனாவும் அதற்கான செலவும்தான் காரணமா? நெஞ்சம் தொட்டு சொல்லட்டும் ஆட்சியாளர்கள்!**

ஜூன் 1ம் தேதி போராட்டத்திற்கு பின்னர் ஜூன் 2ம் தேதி முதல் மின்சார சட்ட திருத்தம் 2020 குறித்து மத்திய அரசு முனைப்பு காட்டுமேயானால் மக்கள் நலன் காக்க, தொழில் அமைதி காக்க, தொழிலாளர் நலன் பேண பட்டி தொட்டியெல்லாம் சென்று பாமர மக்களை சந்தித்து ஆதரவு திரட்டுவோம். மத்திய அரசின் போக்கை முற்றிலும் மாற்றிக் காட்டுவோம்!

**- ஆசிரியர்**

## மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்கட்கு மாண்புமிகு தமிழக முதல்வர் எழுதிய கடிதம்

# மின்சார வரைவு சட்டத் திருத்த அமலாக்கத்தை தள்ளி வையுங்கள்

**மி**ன்சார வரைவு சட்டத் திருத்தங்களை அமல்படுத்துவதை தள்ளி வைக்க மத்திய எரிசக்தித் துறை அமைச்சகத்துக்கு உத்தரவிட வேண்டுமென பிரதமர் நரேந்திர மோடியை முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து, பிரதமருக்கு முதல்வர் பழனிசாமி சனிக்கிழமை எழுதியுள்ள கடிதம்:

மின்சார சட்டத்தில் திருத்தங்கள் தொடர்பான வரைவினை மத்திய எரிசக்தித் துறையானது மாநில அரசுகளுக்கு அனுப்பி வைத்துள்ளதுடன், அது குறித்து கருத்துகளைத் தெரிவிக்கும் படி கோரியுள்ளது.

இந்த விஷயம் குறித்து தங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். தமிழகத்தில் மின்சார வாரியமானது தன்னாட்சி பெற்ற அமைப்பாக இயங்கி வரும் சூழ்நிலையில், மத்திய அரசு அனுப்பி வைத்துள்ள வரைவுகள் குறித்து மாநில அரசுக்கு இருக்கும் கவலைகள் தொடர்பாக சில கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன்.



**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**

*தினமணி நாளிதழ்*

புதிய வரைவு சட்டத் திருத்தத்தில் நுகர்வோர்களுக்கு மின்சாரத்தை வழங்கும் பணியை முகவர்கள் மூலமாக தனியார்களுக்க வழங்க வகை செய்வதுடன், ஒட்டு மொத்த மின்பகிர்மான கட்டமைப்பையே தனியாருக்கு அளித்திட வழிவகுக்கப்பட்டுள்ளது. இது பொது மக்களின் நலனுக்கு முற்றிலும் எதிரானது.

மேலும், இந்த வரைவு சட்டத்திருத்தத்தில் மானியங்களை நேரடியாக அளிக்கும் நடைமுறை தொடர்பான அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

மிகக் குறிப்பாக, வேளாண்மை மற்றும் வீட்டு உபயோகம் தொடர்பான மானியங்களை நேரடியாக பயனாளிகளுக்கே அளிக்கும் திட்டம் இடம் பெற்றுள்ளது.

விவசாயிகளுக்கு மின்சாரத்தை இலவசமாக வழங்கிட வேண்டும் என்பதில் எனது அரசு தொடர்ந்து உறுதியுடன் இருந்து வருகிறது. எனவே மானியங்களுக்கான பணத்தை அளிக்கும் விவகாரங்களை மாநில அரசிடமே விட்டு விட வேண்டும்.

**மின்சார ஒழுங்குமுறை ஆணையம் :** மாநில மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தை அமைப்பதற்கான அதிகாரம் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தை எடுக்கும் வகையில் புதிய வரைவு சட்டத் திருத்தத்தில் வழி வகை செய்யப்பட்டிருப்பது அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள கூட்டாட்சி கொள்கைகளுக்கு எதிரானதாகும்.

மத்திய அரசு அளவில் மின்சார ஒப்பந்த அமலாக்க ஆணையம் என்ற அமைப்பை ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதாவது, மின்சார வாரிய ஒப்பந்தங்கள் தொடர்பான அனைத்து அம்சங்களையும் அந்த ஆணையமே மேற்கொள்ளும்.

இந்தப் பணிகளை இப்போது வரை மத்திய மற்றும் மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையங்களே மேற்கொண்டு வருகின்றன. இதுபோன்ற அம்சங்கள் மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் அதிகாரத்தை தேவையில்லாமல் நீர்த்துப் போகச் செய்வதுடன், ஆணையங்களுக்கான தேவை என்பது இல்லாமல் போய் விடும்.

**கரோனா நோய்த் தொற்று காலம் :** இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் கரோனா நோய்த் தொற்றை எதிர்த்து போராடி வந்து கொண்டிருக்கின்றன. எனவே, புதிய மின்சார வரைவு சட்டத் திருத்தங்களில் உள்ள அம்சங்கள் தொடர்பான விரிவான கருத்துகளைத் தெரிவிக்க மேலும் கூடுதல் காலம் தேவைப்படுகிறது.

மின்சார சட்டத்தில் அவசரமாக திருத்தங்களைக் கொண்டு வருவது மாநில அரசுக்கும் மிகப் பெரிய சுமையை ஏற்படுத்தும். ஏற்கெனவே, கரோனா நோய்த் தொற்று காரணமாக மிகப்பெரிய நிதிச் சிக்கல்களை மாநில அரசு சந்தித்து வருகிறது.

மின்சார வரைவு சட்டத் திருத்தத்தில் உள்ள சில அம்சங்களின் மீது பொது மக்களின் கருத்துகளையும் கேட்க வேண்டிருக்கிறது. ஆனால், கரோனா நோய்த் தொற்று போன்ற இப்போதைய காலத்தில் அதனைச் செய்வது சரியானது அல்ல.

கரோனா நோய்த்தொற்று பிரச்னை முடிவுக்கு வந்த பிறகு மின்சார வரைவு சட்டத் திருத்தத்தில் உள்ள அம்சங்களை மாநில அரசுகளுடன் நன்கு விவாதிக்க வேண்டும்.

இந்த கருத்தை மத்திய எரிசக்தித் துறை அமைச்சகத்துக்கு தாங்கள் வற்புறுத்த வேண்டும் என்று தனது கடிதத்தில் முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி தெரிவித்துள்ளார்.

## விழிப்பு பணி குழுமம் - நடவடிக்கை - பணி நீக்கம் - நீதிமன்ற உத்தரவுகள் - நடைமுறைப் படுத்த புதிய உத்தரவு

**TAMILNADU GENERATION AND DISTRIBUTION CORPORATION**
**ADMINISTRATIVE BRANCH**

144, Anna Salai,
Chennai - 600 002.

**Memo. (Per). No. 015278/64/G.6/G.62/2019-1, dated 08.05.2020**

***Sub : TANGEDCO - Establishment - DV&AC and Criminal Cases - Suspension of employees - Consideration of revocation of Suspension including based on the orders of the Hon'ble Courts - Instructions issued - Reiterated.***

***Ref : i) Memo. (Per.) No. 10207/A18/A181/2012-1, Dated 03.09.2012.***

*ii) Legal Cell U.O. Notice No. 33883/C11/2016-1, dated 20.06.2016. (Communicated to all CEs/SEs through E-mail on 20.06.2016)*

*iii) Memo. (Per). No. 31294/A18/A181/2016-1, Dated 27.06.2016.*

*****

Instructions have been issued from time to time on the course of action to be taken when an employee seeks revocation of suspension more particularly in respect of issues arise out of criminal cases / trap and arrest by the DV & AC. Further, the competent authorities to revoke the orders of suspension are prescribed under regulation 9 of the TNEB Employees Discipline and Appeal Regulations (for officers) and the respective Standing Orders (for clerical and workmen). In spite of existence of provisions in the said Regulations / Standing Orders and also clear instructions issued in the references cited, the cases involving revocation of suspension are repeatedly being referred to the Headquarters, which causes delay.

2) Therefore, all the Chief Engineers and Superintending Engineers and Officers in equivalent rank, while strictly adhering to the Regulations / Standing Orders and the instructions issued in the references cited, shall also pursue the following scrupulously :-

i) In case of a direction from the Hon'ble Court directing revocation / setting aside of suspenstion ordered to an employee based on a DV&AC case, an appeal against such order of the Hon'ble Court to be filed before the Appellate Court without any delay and within the limitation period prescribed for appeal.

ii) In case a direction from the Hon'ble Court directing any competent authority of the TANGEDCO / TANTRANSCO to consider and dispose of the representation of an employee who is under suspension based on a DV & AC case, the official may be informed that the order of revocation of suspension before finalisation of the DV & AC case is not feasible of compliance in view of the policy decisions of the Government / Department issued in Letter (Ms) No. 43/N/2015-3, dated 26.04.2016 and communicated to all officers of the TANGEDCO / TANTRANSCO in Memorandum (Per.) No. 31294/A18/A181/2016-1, Secretariat Branch, dated 27.06.2016 and Memorandum (Per.) No. 1027/A18/A181/2012-1, dated Secretariat Branch, dated 03.09.2012.

iii) To file a detailed counter affidavit in each and every case sekking a direction to quash / revoke ithe order of suspension by explaining the policy decisions in Letter (Ms) No. 43/N/2015-3, dated 26.04.2016 and communicate to all officers of the TANGEDCO / TANTRANSCO in Memorandum (Per.) No. 31294/A18/A181/2016-1, Secretariat Branch, dated 27.06.2016 and Memorandum (Per.) No. 10207/A18/A181/2012-1, Secretariat Branch, dated 03.09.2012 and also by stating the principles discussed in W.P. Nos. 12559 & 12560 of 2015 dated 27.04.2015 as extracted in the opinion of the Legal Cell in U.O. Note No. 33883/C11/2016-1, dated 20.06.2016.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**J. KALAISELVI**
CHIEF ENGINEER / PERSONNEL

## தமிழக அரசு ஓய்வு பெறும் வயதை 59 ஆக உயர்த்திட்ட அரசாணை

**ABSTRACT**

Public services - Age of superannuation of Government servants, Teachers, etc. - increased to 59 years - Orders - Issued.

------------------------------------------------------------------------

**PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (S) DEPARTMENT**

**G.O.(Ms)No. 51**

**Dated 07.05.2020**
சார்வரி - சித்திரை 24
திருவள்ளுவர் ஆண்டு - 2051

**READ :**

G.O.(Ms) No. 532, Personnel and Administrative Reforms (Personnel-M) Department, dated 25.04.1979.

****

**ORDER :**

The Government haved decided to increase the age of superannuation of Government servants from 58 years to 59 years and orders accordingly. This will apply to all those who are in regular service as on date and due to retire on superannuation from 31.05.2020.

2. This order shall also be applicable to all teaching and non-teaching staff working in aided educational institutions and employees of all Constitutional / Statutory Bodies, Public Sector Undertakings including all State Corporations, Local Boides, Boards, Commissions, Societies etc.,

3. The relevant provisions under rule 56 of Tamil Nadu Fundamental Rules will be modified to the above extent. Necessary amendment to the above rules will be issued accordingly.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K. SHANMUGAM,**
CHIEF SECRETARY TO GOVERNMENT

## வீடு கட்டும் கடன் - வட்டி விகிதம் குறித்த உத்தரவு

## TAMILNADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED

Secretariat Branch,
144, Anna Salai,
Chennai - 600 002.

**Memo. (Per) No. 4333/A7/A71/2020-2, dated 5.05.2020**

***Sub*** : ***Loans & Advances - House Building Advance - Interest recovery - Rate of interest - Instructions - Issued.***

***Ref*** : ***i) (Per) B.P.(FB) No. 7 (SB) dated 7.4.2010***
***ii) (Per) BP (Ch) No. 138 (SB) dated 6.7.2010.***
***iii) (Per) TANGEDCO Proceedings (FB) No. 41 (SB) dated 3.10.2011.***
***iv) (Per) FB TANGEDCO Proceedings No. 48 (SB) dated 5.9.2012***

*****

In the reference first cited, orders were issued enhancing the ceiling limit towards House Building Advance from Rs. 6.00 lakhs to 15.00 lakhs with effect from 1.4.2010.

2. In the reference second and third cited, among others, orders were issued revising the rate of interest to be recovered for the advances sanctioned towards House Building Advance during the year 2009 - 2010 and 2010 - 2011 respectively. The rate of interest for effecting recovery towards House Building Advance is also being communicated to the sanctioning authorities from time to time.

3. In the reference fourth cited, orders were issued enhancing the ceiling limit towards House Building Advance from Rs. 15.00 lakhs to 25.00 lakhs with effect from 1.4.2012.

4. Instances have been brought to the notice that the sanctioning authorities are effecting recovery towards interest on House Building Advance sanctioned from the year 2009 - 2010, for the sum namely above Rs. 5.00 lakhs as well, at ceiling rates. The same is not in order.

5. All the sanctioning authorities of TANGEDCO / TANTRANSCO are hereby instructed verify and recover the interest towards House Building Advance for the entire amount sanctioned, namely for the advances above Rs. 5.00 lakhs from the year 2009 - 2010, at the rate of interest prescribed from time to time.

6. The instructions issued above, shall be adhered scrupulously.

**S. VINEETH**
SECRETARY (FAC).

# ஓய்வு வயது 59 - அரசாணை குறித்து கருத்தும் - விளக்கமும்

**Personnel and Administrative Reforms (S) Department,**
Secretariat, Chennai - 600 009.
சார்வரி - சித்திரை 30
திருவள்ளுவர் ஆண்டு - 2051

**Letter No. 11308/S/2020-1, Dated 14.05.2020**

From

**Thiru K. Shanmugam,** I.A.S.
Chief Secretary to Government

To

All Secretaries to Government, Chennai - 600 009.
All Department of Secretariat, Chennai - 600009.
All Heads of Departments,
All District Collectors
All District Judges / District Magistrates
The Finance (BPE) Department, Chennai - 600 009.
The Secretary, Tamil Nadu Public Service Commission, Chennai - 3.
The Registrar General, High Court of Madras, Chennai - 600 104.
The Registrar Madurai Bench of Madras High Court, Madurai - 23.
The Accountant General, Chennai - 600 018.
The Commissioner of Treasuries and Accounts, Chennai - 600 035.

Sir,

***Sub : Public Services - Age of Superannuation of Government Servants, Teachers etc - Orders - Issued - Clarifications sought for - Regarding.***

***Ref : G.O. (Ms.) No. 51 Personnel and Administrative Reforms (S) Department, dated 07.05.2020***

*****

In the Government order cited, the Government have issued orders increasing the age of superannuation of Government servants from 58 years to 59 years. Consequent to the issuance of the above Government order, certain points have been raised for clarification. The Government have examined the same and the following clarifications are issued.

| Sl. No. | Clarification sought | Reply |
|---|---|---|
| 1. | Whether the orders issued in G.O. (Ms.) No. 51, Personnel and Administrative Reforms | The orders issued in the said Government Order shall not apply to those |

| Sl. No. | Clarification sought | Reply |
|---|---|---|
| | (S) Department, dated 07.05.2020 are applicable to the Government servants who have attained the age of fifty eight years on or before the first day of May, 2020 and re-employed. | Government servants who have attained the age of fifty eight years on or before the first day of May, 2020 and re-employed. |
| 2. | Whether the teaching staffs suc h as Teachers. Lecturers, Professors etc., who retired at the age of 58 years and are re-employed till the completion of the academic year. 2019 - 2020 are eligible for the retirement age ordered in G.O. (Ms.) No. 51. Personnel and Administrative Reforms (S) Department, dated 07.05.2020 | The said Government Order is not applicable to those teaching staffs such as Teachers, Lecturers, Professors etc. who have already retired prior to May 2020 but re-employed for the remaining academic year. |
| 3. | Whether the retirement age of 60 years need to be increased to 61 to the Government servants whose age of retirement is 60 at present. | The orders issued in G.O. (Ms.) No. 51, Personnel and Administrative Reforms (S) Department, dated 07.05.2020 shall not be applicable to them. They shall retire at the age of 60 years. |
| 4. | Whether the said Government order is applicable to the Government servants whose services are retained under rule 56(i) (c) of Fundamental Rules and not allowed to retire on or before 30.04.2020 due to disciplinary proceedings pending against them. | The said Government order is not applicable to the Government servants whose services are retained under rule 56(i) (c) of Fundamental Rules and not allowed to retire on or before 30.04.2020 due to disciplinary proceedings pending against them. |
| 5. | Whether the orders issued in G.O. (Ms.) No. 51, Personnel and Administrative Reforms (S) Department, dated 07.05.2020 is applicable from the date of issue of orders or it takes retrospective effect. | As ordered in the said Government Order, it is clarified that it is applicable to all those who are in regular service as on 07.05.2020 and due to retire on superannuation from 31.05.2020. |

Yours faithfully
For Chief Secretary to Government

## தலைமை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் - புதிய பதவி உருவாக்கம்

## TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION
## (ABSTRACT)

Establishment TANGEDCO - Creation of one post of Chief Financial Controller designated as Chief Financial Controller / Deposits and Documentation in the Accounts Branch / TANGEDCO Orders Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per) CMD TANGEDCO Proceedings No. 88** **Dated 13th May 2020**
Chithirai - 30
Thinruvalluvar Aandu 2051

**READ :**

**i) Memo. (Per) No. 000402/010/G.37/G.371/2019-2, dated 11.04.2019**
**ii) From the Director (Finance) / TANGEDCO U.O. No. Dir/Fin/CFC/Gen/2020 dated 07.05.2020**

****

**PROCEEDINGS :-**

Sarction is hreby accorded for creation of one post of Chief Financial Controller in the Level of Pay of Rs. 1,27,400-2,23,300/- be designated as Chief Financial Controller / Deposits and Documentation in the Accounts Branch / TANGEDCO, for a period of one year from the date of utilization of the post and upto 28.02.2021, for co-ordinating with TNPFC and other Government Institutions for mobilization of funds.

2. Consequent to the orders issued in para - 1 above, two posts of Assistant (Accounts) (i.e.) one post from Resource Division in TANGEDCO and one post diverted to TANTRANSCO from TANGEDCO last continued in the reference first read above shall be abolished with effect from the date of utilization of the newly created post.

3. The incumbent of the post ordered in para-1 above will be eligible to draw the usual pay, Dearness Allowance, House Rent Allowance, City Compensatory Allowance and other allowances at the rates admissible under the orders in force wherever applicable.

4. The expenditure is debitable to “TANGEDCO Funds Revenue Expenses 75 Employees costs 75.1 Salaries 75.110 Salaries Provincial”.

5. The receipt of this proceedings shall be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**Dr. S. VINEETH**
SECRETARY (a/c)

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LTD.**
**TECHNICAL BRANCH**

**144, Anna Salai,**
**Chennai – 600 002.**

**Memo No: CE/Coml/SE/EE3/AEE2/F.Plg.Per/D.73/2020, dt.14-05-2020**

***Sub : Electricity – Effecting of electricity service connections to the buildings in the entire Tamil Nadu – Insisting of Completion Certificate issued by the local authority – Instruction issued - Regarding***

***Ref : 1. G.O.Ms.No.112, Energy (B1) Department, dated 05-07-2004***
***2. Memo No. CE/Comml/SE/EE3/AEE2/F.Plg.Per/D.175/2017,dt 04-05-2017***
***3. Order dated 09-01-2018 of the Hon'ble High Court of Madras in W.P.No.14520 of 2017***
***4. Tamil Nadu Combined Development and Building Rules, 2019 notified vide G.O.(Ms) No.18 (MA.I), dated 04-02-2019.***

****

Instructions have been issued from time to time in the matter of providing electricity service connections to the buildings in the State of Tamil Nadu to obtain completion certificate wherever necessary pursuant to the orders of the Hon'ble High Court.

2. The Hon'ble Division Bench of High Court of Madras in its order dated 09-01-2018 in W.P.No.14520 of 2017 had directed the utilities including TANGEDCO to follow the guidelines stipulated by the Government of Tamil Nadu.

3. While so, the Government of Tamil Nadu, in G.O.Ms.No. 18, Municipal Administration and Water Supply (MA.I), dated 04.02.2019, notified the Tamil Nadu Combined Development and Building Rules, 2019 and the same came into force from 04-02-2019.

4. Rule 20 of the said Rules, 2019, inter-alia, provides that for all buildings, the applicant shall submit a completion report, to obtain completion certificate, certifying that the building is completed as per the approved plan, by the competent authority who has issued planning permit and that the service providers such as water and electricity shall provide such service only after production of completion certificate; that no such connections shall be made without the prior permission of the authority and without obtaining completion certificate; and that in case the use is changed or unauthorized construction is made, the authority is authorised to discontinue such services or cause discontinuance of such service. However, the said Rule 20 exempts residential building upto 12 metres height not exceeding three dwelling units, other buildings upto 750 square metres and all industrial buildings from the purview of the said Rules, 2019. So also, in sub-rule (4) of rule 74 of the said Rules, 2019, it is specifically stated that the Rules, 2019 shall not apply to constructions in progress as per the valid approved plans accorded on or before 04.02.2019 and that the exemption is applicable till the expiry of the Planning Permit or Building Permit with renewal period for the above such constructions in Progress and that it shall also not apply in cases of buildings constructed already as per the approved plan and completion certificate is awaited from the competent authority.

5. Further, sub-rule (11) of rule 20 of the said Rules, 2019, inter-alia, further provides that temporary electricity connections permitted for the purpose of facilitating the construction shall not be allowed to continue in the premises after completion of building construction.

6. In view of the said statutory provisions under the Tamil Nadu Combined Development and Building Rules, 2019, superseding the earlier instructions including based on the orders of the Hon'ble High Court, Madras issued in this regard, the following instructions are issued for strict adherence throughout the state:-

   a. Except the residential building upto 12 metres height not exceeding three dwelling units, other buildings upto 750 square metres and all industrial buildings, all other buildings requires completion certificate before effecting electricity service connection(s). For the exempted buildings, the intending consumer shall not be insisted to produce Planning Permit and Completion Certificate for effecting electricity service connections.

   b. While registration of application for permanent electricity supply, except as far as the exempted buildings stated above, the application shall be accompanied with planning permit.

   c. In view of the provisions contained in section 175 of the Electricity Act, 2003, (Provisions of this Act to be in addition to and not in derogation of other laws), as far as the buildings coming under non-exempted category are concerned, on completion of the construction of the building, the temporary electricity service connection provided for construction purpose has to be disconnected and the permanent electricity service connection(s) shall be provided on receipt of the completion certificate as stated above. However, this will not apply to the exempted buildings and as such, for exempted buildings alone, the provisions contained in Regulation 39 of the TamilNadu Electricity Distribution Code, 2004 shall be followed.

   d. As per the provisions in the TN Combined Development and Building Rules, 2019, production of completion certificate shall not apply to constructions in progress as per the valid approved plans accorded on or before 04.02.2019 including subsequent renewal period and also for buildings constructed already as per the approved plan and completion certificate is awaited from the competent authority. However, in case of construction of building already in progress or construction completed, prior to 04.02.2019, in respect of Multistoried buildings (Stilt + 4 or Ground + 3 floors and above) alone in the CMDA area, the earlier instruction issued in Memo No. CE/Comml/SE/Comml/ EE3/AEE2/F.Plg.Per/D.175/2017, dt 04-05-2017, requiring to insist planning permission and completion certificate for effecting electricity service connections, shall be continued to be followed.

   e. On other aspects, the provisions contained in the Tamil Nadu Electricity Supply Code, 2004 and/or the Tamil Nadu Electricity Distribution Code, 2004 and Electricity Act, 2003 shall be followed scrupulously.

Receipt of the memo shall be acknowledged.

**// By the order of CMD/TANGEDCO//**

Sd./-dated. 14.05.2020
Chief Engineer/Commercial (a/c)

## TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED

Secretariat Branch
144, Anna Slaai,
Chennai - 600 002.

**Memo. (Per.) No. 17879/A3/A31/2020-1, Dated : 12.05.2020**

***Sub : TANGEDCO - Union - Deduction of Union Subscription from the salary of their willing members - Extension of time - Granted.***

***Ref : (Per.) B.P. (Ch) No. 111, (SB) dated 09.05.2007***

****

In the Board's Proceedings cited, detailed guidelines were issued for deduction of Annual Union Subscription and Donation from the salary of the willing employees. In the standard terms and conditions annexed to the Board's Proceedings, it has been ordered that subscription shall be deducted from the Pay bill for May payable in June and donation shall be deducted from the pay bill for November payable in December, every year.

2. It has been represented by the Unions that due to the outbreak of COVID-19 Pandemic, the lockdown is enforced till 17.05.2020. Considering the infection rate in our state which is categorized as Red zone, there is a possibility of further extension of lockdown period. In this lockdown period they have no access to reach their members to collect the revised option forms to the pay claiming authorities before 15.05.2020.

3. The request has been examined and accepted. Accordingly, it is hereby ordered to extend the time limit to permit all the Unions in the scheme of deduction of Union Subscription and Donation to exercise fresh willingness for the year 2020 **as a special case upto 15.08.2020.** This should not be quoted as precedent in future.

4. The receipt of the Memo, shall be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**S. VINEETH**
SECRETARY (A/c)

## TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED

**(ABSTRACT)**

TANGEDCO - Allowances - Measures to tide over the financial constraints in view of the severe fiscal crisis arising out of COVID - 19 panemic - Freezing of Dearness Allowance to TANGEDCO Employees, Pensioners / Family Pensioners at current rates till July 2021 - Adoption of Government Orders - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per) CMD TANGEDCO Proceedings No. 86,** **Dated : 08.05.2020**
Chithirai 25,
Sarvari Varudam
Thiruvalluvar Aandu 2051

**Read :-**

*i. (Per.) FB TANGEDCO Proceedings No. 9 (SB), Dated : 02.03.2018.*
*ii. (Per.) FB TANGEDCO Proceedings No. 10 (SB), Dated : 02.03.2018*
*iii. (Per.) CMD TANGEDCO Proceedings No. 191, (SB), Dated : 18.10.2019.*
*iv. (Per.) CMD TANGEDCO Proceedings No. 192, (SB) Dated : 23.10.2019.*
*v. G.O. Ms. No. 232, Finance (Allowances) Department Dated : 27.04.2020*

****

**PROCEDDINGS :-**

In the Board's Proceedings first and second read above, orders were issued for Revision of Pay, Dearness Allowance and other allowances with effect from 01.01.2016 taking into account the pay drawn by the employees / officers on 01.12.2015 with monetary benefit from 01.10.2017. In the said orders, among other things it has been ordered that the revised rates of Dearness Allowance under the revised pay structure were granted as shown below:-

| Sl. No. | Date from which payable (per month) | Rate of Dearness Allowance |
|---|---|---|
| 1. | 01.01.2016 | 0 (Zero) |
| 2. | 01.07.2016 | 2% of Basic Pay |
| 3. | 01.01.2017 | 4% of Basic Pay |
| 4. | 01.07.2017 | 5% of Basic Pay |

2. In the Board's Proceedings third and fourth read above, orders were issued sanctioning revised rate of Dearness Allowance to the TANGEDCO Employees and

Pensioners/Family Pensioners at the rate of 17 Percent with effect from 1st July 2019 following the orders issued by the Government of Tamil Nadu.

3. In the Government order fifty read above, orders were issued to the State Government employees, teachers and Pensioners / Family Pensioners, freezing the Dearness Allowance at current rates till July 2021. It also has been ordered that the additional installment of Dearness Allowance payable to State Government employees, teachers and Government pensioners / Family Pensioners, due from 1st January 2020 shall not be paid. Further, the additional installments of Dearness Allowance due from 1st July 2020 and 1st January 2021 shall also not be paid. The adoption of the said Government Order in TANGEDCO has been examined in detail.

4. After careful consideration, it has been decided to adopt the Government Order and it is hereby ordered that the Dearness Allowance to the Employees, Pensioners/Family Pensioners of TANGEDCO be frozen at current rates till July 2021. The additional installment of Dearness Allowance payable to Employees, Pensioners/Family Pensioners of TANGEDCO due from 1st January 2020 shall not be paid. The additional installments of Dearness Allowance due from 1st July 2020 and 1st January 2021 shall also not be paid.

5. However, Dearness Allowance at current rates will continue to be paid. As and when the decision to release the future installment of Dearness Allowance due from 1st July 2021 is taken by the Government of Tamil Nadu, the rates of Dearness Allowance as effective from 1st January 2020, 1st July 2020 and 1st January 2021 will be restored prospectively and will be subsumed in the cumulative revised rate effective from 1st July 2021. No arrears for the period from 1st January 2020 till 30th June 2021 shall be paid.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**S. VINEETH**
SECRETARY (A/c)

## கொரோனா - பாதிப்புக்குள்ளானால் மருந்து செலவு - தொடர்பான உத்தரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**
**(ABSTRACT)**

TANGECO - SECRETARIAT BRANCH - Diaster Management - Covid - 19 confirmec cases - Measures to take care of frontline staff - Reimbursement of the medical expenses to the employees - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per) CMD TANGEDCO Proceedings No. 79,** **dated 05.05.2020,**
Saarvari Varudam,
Chithirai - 23,
Thiruvalluvar Aandu, 2051.

**READ :**

**G.O. (Ms) No. 180 Revenue and Disaster Management Department Disaster Management Wing, D.M.I. Section, dated 04.04.2020.**

**PROCEEDINGS :**

In the Government Order read above, among other things, orders have been issued to the effect that all categories of officials belonging to the Health and Family Welfare, Revenue & Disaster Management, Police, Sanitary and Conservancy employees of Rural / Urban local bodies dealing with prevention work and other departments who were directly involved in COVID-19 prevention, identification, quarantine and treatment activities, etc., be provided with free treatment for confirmed COVID-19 positive cases needing hospital based treatment whether in Government or Private Institutions. This order may be reviewed after 31.05.2020, based on the situation at that time and decision will be taken.

2. Based on the above orders, certain Trade Unions have reprsented requesting to adopt the said orders with a view to safeguard the Officers, Engineers and Employees of the Corporation if they are affected by the said disease while attending the essential official duties. Their requests have been carefully examined and it has been decided to take care of employees who are frontline staff by incurring treatment expenditure whether in Government or Private Hospitals.

3. Accordingly, it is hereby ordered that the treatment expenditure for confirmed **COVID-19 positive cases in respect of frontline staff of TANGEDCO / TANTRANSCO needing hospital based treatment whether in Government or Private institution, be borne by this Corporation.**

4. The COVID-19 confirmed frontline employee shall approach either in Government or Private Hospital for treatment. The Controlling Officer of the employee shall report to the headquarters via email the medical treatment/arrangement bein taken by the employee. **The employee has to pay the medical expenses directly to the hospital and then seek cash reimbursement.**

5. All the Chief Engineers/Superintending Engineers / Head of Departments are hereby directed to send the proposal for reimbursement of the cost of treatment for confirmed COVID-19 positive cases to the Secretary / TANGEDCO along with the followings documents / particulars for sanction :-

a) Chief Engineers/Superintending Engineers report to the effect that the confirmed COVID-19 employee is a frontline staff;

b) Discharge Summary in original along with the seal and signature of the Hospital;

c) Hospital main bill along with the seal and signature of the hospital authorities;

d) Endorsement ‘Paid by me’ on the back side of all the bills;

**VIKRAM KAPUR**
CHAIRMAN CUM MANAGING DIRECTOR

## கொரோனா - அரசுப் பணியாளர் - 50% பணியை மேற்கொள்ள அரசாணை

**ABSTRACT**

Public Services - COVID - 19 - Functioning of Government offices with six day week - Ensuring Social distancing with half the work force at any given point of time - Orders - Issued.

---

**Revenue and Disaster Management (DM-II) Department**

**G.O. (MS) No. 239** **Dated : 15.05.2020**

சார்வரி - வைகாசி 2

திருவள்ளுவர் ஆண்டு - 2051

**Read :**

1. ***G.O. (Ms) No. 172, Revenue and Disaster Management Department, Dated, 25.03.2020***
2. ***G.O. (Ms) No. 217, Revenue and Disaster Management Department, Dated, 03.05.2020***

*****

**ORDER :**

During the period of lock down due to Covid - 19 pandemic, the working strength of all Government offices was kept at a maximum of 33% as per Notification dated 03.05.2020 second read above.

2. From 18.05.2020, in order to have regular functioning of Government offices by maintaining social distancing in offices, the Government direct that all Government offices shall function with half the work force in any given day. In addition, in order to compensate the working hours already lost, the Governement direct that a system of six-day working week including Saturdays as working days, with present office timings be brought into force.

3. Accordingly, the Government direct to bring in the following system of office functioning in all Government offices with effect from 18.05.2020 :-

i. six - day working week including Saturdays as working days, with present office timings ;

ii. all Government offices **shall function with half the work force (i.e. 50%);**

iii. in the start of a week, first batch shall work for 2 days at a stretch (Monday & Tuesday) and the second batch shall work for the next 2 days (Wednesday & Thursday) followed by the first batch for the next 2 days (Friday & Saturday);

iv. in the subsequent week, second Batch shall work for 2 days at a stretch (Monday & Tuesday) and the first batch shall work for the next 2 days (Wednesday & Thursday) followed by the second batch for the next 2 days (Friday & Saturday).

v. notwithstanding the above alternate working system, the staff on off-duty shall also attend office if called for at any point of time;

vi. All Group 'A' Officers i.e., all staff in posts drawing level of pay from Rs. 59,300 - 1,87,700 to Rs. 1,28,900 - 2,25,000 (levels 25 to 32 in the pay matrix) and all Head of Offices (irrespective of level in the pay matrix) shall attend office on all working days;

vii. A system of level-jumping in the submission of files in the reporting hierarchy shall be put in place by the Head of the Department, if necessary;

viii. All officers / staff members shall always be available for official work and accessible through any electronic mode of communication;

ix. this system of office functioning shall be followed in all Government offices from Secretariat to district / field level office including Commissions, Boards, Corporations, Universities, Companies, Institutions, Societies etc., of the State Government;

x. the departments / offices such as Police, Health, District Administration, Treasury, Local Boides etc., shall continue to function as per the orders issued in G.O. (Ms) No. 172, Revenue & Disaster Management Department, dated 25.03.2020.

4. Necessary bus transport arrangements will be made. The above orders shall be followed scrupulously, unti further orders.

**(By order of the Governor)**

**K. SHANMUGAM**
CHIEF SECRETARY TO GOVERNMENT

## கொரோனா காலம் - கணக்கீட்டு பணிக்கு விலக்கு அளிக்க வேண்டி வாரியத்திற்கு கடிதம்

நாள் : 06.05.2020

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

அய்யா,

**பொருள்** : கணக்கீட்டாளர்கள் - கணக்கீட்டு பணி - கொரோனா நோய் தொற்று - தொடர்பாக..

**பார்வை** : **1. Memo No. CFC/Rev/FC/Rev/DFC/Rev/F.EOT/D267/2020 Dt. 05.05.2020**
**2. Circular Memo No. 15584/A9/A92/2020-7/Dt. 04.05.2020**

**3. Letter No. 15584/A9/A92/2020-4/Dt. 17.04.2020**
**4. Memo No. CFC/Rev/FC/Rev/DFC/Rev/F.EOT/D.235/2020 Dt. 13.04.2020**

பார்வை (1)ல் கண்டுள்ளபடி மின் கணக்கீடு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை (2)ல் கண்டுள்ள உத்தரவை நிறுத்தி வைத்து பார்வை (3)ல் கண்டுள்ள உத்தரவை மீண்டும் நீட்டித்து உத்தரவு வழங்கிட ஏற்கனவே தொழிற்சங்கங்களின் சார்பாக கேட்டுக் கொண்டுள்ளோம்.

எனவே, பார்வை (1)ல் கண்டுள்ள உத்தரவை நிறுத்தி தவைத்து பார்வை (4)ல் உள்ள உத்தரவை நீட்டித்து மறு உத்தரவு வழங்கிட கேட்டுக் கொள்கிறோம்.

இது குறித்து தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருவது யாதெனில்,

1. **கொரோனா ஊரடங்கு 17.05.020 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.**
2. **கொரோனா தொற்று நாடெங்கும் அதிகமாக பரவி வரும் நேரமிது.**
3. **சென்னை மாநகரம் உட்பட மாநிலத்தின் அனைத்து பகுதிகளில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள இடங்களில் யாரும் நுழைய முடியாத அளவிற்கு பாதுகாக்கப்பட்டுள்ள பகுதியாக உள்ளது.**
4. **சென்னை தவிர்த்து வெளி மாவட்டங்களில் அடுத்த ஊரை சார்ந்தவர்களாக இருந்தால் உள் நுழைய பெருந்தடை உள்ளது.**
5. **மின்நுகர்வோர்கள் வீட்டில் கொரோனா தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தாத நிலையில் மின்கணக்கீட்டு பணிக்கு போவது ஆபத்தானது.**
6. **உதாரணத்திற்கு,**
   1. *சென்னை கே.கே. நகர் SE அலுவலகத்தில் உள்ள மின்தடை நீக்கும் பணி உள்ள இடத்தில் (Fuse of Call Center) ஒருவருக்கு வந்த நோய் தொற்று தற்போது 11 பேருக்கு உறுதியாகியுள்ளது. மற்ற 21 பேருக்கு பரிசோதனை முடிவுக்காக காத்திருக்கிறார்கள்.*
   2. *சென்னை தெற்கு வட்டம் தாம்பரம் கோட்டம் கோவிலம்பாக்கம் பிரிவில் மின்தடை நீக்கம் செய்ய சென்ற பணியாளர்கள் (நுகர்வோருக்கு நோய் தொற்று உறுதியாகியுள்ளதால்) பாதிக்கப்பட்டுள்ளார். மூன்று பணியாளர்கள், அவர் தம் குடும்பத்தினர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.*

கிராமம், நகரம், நகரியம் என்ற பாகுபாடு இல்லாமல் கொரோனா நோய் தொற்று பரவலாக உள்ள நேரத்தில் 100 சதவிதம் பணியாளர்கள் வர வேண்டும் என்று சொல்வதும் கணக்கீட்டு பணிக்கு செல்ல வற்புறுத்துவதும் நாமே நம் கண்ணை குத்திக் கொள்வது போலாகும்.

எனவே, மேற்கண்ட கருத்துகளைக் கவனத்தில் கொண்டு தலைவர் அவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்து கணக்கீட்டு பணிக்கு செல்ல உத்தரவிட்டுள்ளதை நிறுத்தி கடந்த மாதக் கட்டணம் (PMC) செலுத்திட உடனடியாக உத்தரவிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## ஈட்டிய விடுப்பு - நிறுத்தம் தொடர்பான நடவடிக்கைக்கு தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை

### மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழு

**144, அண்ணா சாலை, சென்னை - 600 002.**

நாள் : 30.4.2020

பெறுநர்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்** அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணா சாலை, சென்னை - 600 002.

ஐயா,

வணக்கம்.

**பொருள் : தமிழக அரசு - அரசு ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு செய்வதை நிறுத்தி உத்திரவு வழங்கியது - பஞ்சப்படி நிறுத்தம் - தொடர்பாக..**

**பார்வை : 1. G.O. MS No. 49 dt. 27.4.2020**
**2. GO. MS No. 232 dt. 27.4.2020**

தமிழக அரசு தனது ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பை சரண்டர் செய்து காசாக்கிக் கொள்ளும் சலுகையை ஓராண்டுக்கு நிறுத்தி வைத்துள்ளது. அதே போல பஞ்சப்படி உயர்வை அடுத்த ஆண்டு ஜூன் 2021 வரை நிறுத்தி வைத்துள்ளதையும் மின்வாரியத்திலும் அமுலாக்கம் செய்யப் போவதாக தெரிய வருகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஏற்கனவே ஈட்டிய விடுப்பு சரண்டர் செய்தமைக்காக பல மாதங்களாக பணத் தொகை வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். மேலும் மின் வாரிய பணியாளர்கள் நிலையாணை விதிகளின் கீழ் வருபவர்கள் என்பதால் அரசின் இந்த உத்தரவு எங்களுக்கு பொருந்தாது என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

தமிழக அரசு அறிவித்துள்ள சலுகைகளில் (COVID-19) மின்வாரிய ஊழியர்கள் இடம்பெறவில்லை என்ற வருத்தமும் கவலையும் ஊழியர்கள் மத்தியில் இருந்து வருகிறது. இந்த பேரிடர் காலத்திலும் நமது ஊழியர்கள் அலுவலர்கள் பொறியாளர்கள் மிகுந்த சிரமத்துடன் தன்னலம் பாராத பணியை செய்து வருவதும் தடையில்லா மின்சாரத்தை மக்களுக்கு வழங்கி சமூக பரவலை தடுக்கும் முயற்சியில் விழிப்புணர்வுடன் அர்ப்பணிப்பு தன்மையுடன் தங்களைப் பற்றியும், தங்களது குடும்பத்தை பற்றியும் கவலைப்படாமல் கொடிய வைரஸ் தொற்று உள்ள இடங்களில் பணியாற்றி தடையில்லா மின் விநியோகம் செய்து வருவது தாங்கள் அறிந்ததே!

கடந்த சில நாட்களுக்கு முன் தமிழகம் முழுவதும் கனமழை பெய்த பொழுது ஏற்பட்ட மின் தடையை குறைந்த பணியாளர்களை கொண்டு விரைந்து மின்தடையை நீக்கி மின் விநியோகத்தை வழங்கியவர்கள் நமது ஊழியர்களும் பொறியாளர்களும் என்பதை தங்களது பார்வைக்கு கொண்டு வர விரும்புகிறோம்.

மேலும் 42,000த்திற்கும் மேற்பட்ட காலியிடங்கள் பல ஆண்டுகளாக நிரப்பாமல் இருந்த நிலையில் அந்தப் பணிகளையும் கூடுதலாக சுமந்து பணியாற்றி வருபவர்கள் நமது மின் வாரிய ஊழியர்கள் அலுவலர்கள் பொறியாளர்கள். இதனால் வாரியத்திற்கு பல கோடி ரூபாய் லாபம் என்பதையும் தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

தமிழக அரசின் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைக்காக மின் வாரியத்தில் உள்ள சங்கங்கள் தங்களது ஊழியர்களின் ஒரு நாள் ஊதியத்தை பிடித்தம் செய்து கொள்ளலாம் என அறிவித்து அரசின் நடவடிக்கைக்கு உறுதுணையாக இருந்ததை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் மேற்கண்ட கருத்துகளை பரிசீலித்து தமிழக அரசின் மேற்கண்ட உத்தரவுகளை மின்சார வாரியத்தில் நீட்டித்து உத்தரவு வழங்கக் கூடாதென கீழ்க்கையொப்பமிட்டுள்ள தொழிற்சங்கங்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

1. தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம்

2. TNEB கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்

3. தமிழ்நாடு மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

4. தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

5. தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்

6. TNEB ஐ.என்.டியு.சி. (சேவியர்)

7. TNEB ஐ.என்.டியு.சி. (சுவர்ணராஜ்)

8. தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

9. தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ்

10. TNEB தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்

11. தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் கழகம்

12. கணக்கதிகாரிகள் சங்கம்

13. பீ.எம்.எஸ். (BMS)

14. கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

15. TNEB அமமபத்கார் தொழிலாளர் யூனியன்

16. தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் என்ஜினியர் யூனியன்

17. TNEB எம்பளாயீஸ் பெடரேஷன்

நாள் : 01.05.2020

# மேதின வாழ்த்துகள்

**தோழர்களே! வணக்கம்.**

உலகம் முழுவதும் உயிர்ப்பயம் பற்றி எரிந்துகொண்டிருக்கிறது. இறப்பின் எண்ணிக்கையும் பாதிக்கப்பபட்டடோரின் கணக்கும் அளவிடமுடியா!

சற்றேறக்குறைய ஒருமாத காலமாக இந்தியத் திருநாட்டின் சப்த நாடிகளும் அடங்கிக் கிடக்கிறது, பாரதத்தாயின் பிள்ளைகள் ஒவ்வொரு நாளும் நோய் நம்மை தொற்றுமோ என பயந்து பயந்து வாழும் அவலம் கோரப்பிடியில் ஆழ்த்தியிருக்கிறது

இப்படிப்பட்ட பேரழிவை உலகம் ஒருபோதும் சந்தித்தில்லையென பேசப்படுகிறது. நோய் தொற்றிலிருந்து பாதுகாக்க எடுக்கக் கூடிய அனைத்து நடவடிக்கைகளும் பாராட்டத்தக்கதாக அமைந்துள்ளது என்பதை மறுத்திட இயலாது, உலக அளவில் ஒப்பிட்டு பார்க்கும்போது இந்தியா பாதுகாப்பாக இருக்கிறது. குறிப்பாக நாம் வாழும் தமிழகம் முழு சக்தியையும் பயன்படுத்தி பாதுகாப்பு வளையத்திற்குள் உள்ளது என்பதையும் யாரும் மறைத்திட இயலாது.

நோய் தொற்றைத் தடுக்க எடுத்திடும் நடவடிக்கைகளுக்கு தங்கு தடையற்ற மின்சாரத்தை வழங்குவதில் மின்சாரவாரியம் ஊரடங்கு நேரத்தில் அளப்பரிய பணியை செய்துகொண்டிருக்கிறது.

ஓகி, வர்தா, கஜா புயல் மற்றும் சுனாமி காலங்களில் செய்திட்ட பணியைவிட நூறு மடங்கு மேலான பணியினை மேற்கொண்டுள்ளோம் என்றால் மிகையாகாது.

நாட்டு மக்கள் முழுவதும் வீடடங்கியிருக்கும் நேரத்தில் ஆபத்தான துறையில் பணிசெய்கிறோம் என்பதை நெஞ்சம் நிமிர்த்திக் கூறலாம்.

எட்டு மணி நேரம் வேலை, எட்டு மணி நேரம் ஓய்வு, எட்டு மணி நேரம் உறக்கம் என உரிமையைக் கோரி பெற உயிர்நீத்த தியாகிகளின் நினைவாக வீரவணக்கம் செலுத்தும் மேதினத்தில் உலகமே கொடிய நோயின் தாக்கத்தில் சிக்கியிருக்கிறது என்பது கவலையளிக்ககூடியதாகும்.

ஊரடங்கின் பாதிப்பால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட அமைப்பு சாரா தொழிலாளர்கள் ஆட்டோ, கட்டிடவேலை மற்றும் இதர பணிகளை மேற்கொள்வோர் போலவே மின்சார வாரியத்திற்கு வெளியே வீடுகளுக்கு, கடைகளுக்கு, நிறுவனங்களுக்கு, தொழிற்சாலைகளுக்கு மின்இணைப்புக் குட்டபட்ட புதிய வயரிங்க் மற்றும் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்வோர் 15000க்கு மேற்பட்டோர் தமிழகம் முழுவதும் உள்ளார்கள், நலவாரியத்தில் பதிவு செய்தவர்கள் போக எஞ்சியவர்களுக்கு கிடைக்காதது போலவே அமைப்பு சாரா தொழிலாளர்களில் வயரிங்க் பணிகளை மேற்கொள்ளும் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மின்சார வாரியத்தில் கட்டுமானம், விநியோகம், மற்றும் மின் உற்பத்தி பகுதிகளில் பணியாற்றும் 10000க்கு மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களுக்கு மின்சார வாரியமோ அரசோ எதுவும் தராத நிலை வேதனையளிக்கூடியதாக உள்ளது, ஆங்காங்கே பல இடங்களில் நமது தோழர்கள் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு தேவையான உதவிகளை செய்துள்ளார்கள், இந்தநேரத்தில் தோழர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டவர்களாவோம்.

கடந்த ஆறுமாதங்களுக்கு மேலாக நமக்கு கிடைக்க வேண்டிய பணப்பயன்கள் கிடைக்காமலிருக்கும் சூழ்நிலையில் நாட்டு மக்களுக்கு உதவிடுவதற்காக நாட்டின் குடிமகனாகவும் நிறுவனத்தில் பணியாற்றுபவர்களாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் நிவாரண நிதிக்கு ஒரு நாள் ஊதியம் வழங்கியுள்ளோம்.

இந்நிலையில்தான் தமிழ்நாடு அரசு மத்திய அரசு எடுத்த முடிவை அப்படியே ஏற்று அகவிலைப்படி நிறுத்தம், ஈட்டிய விடுப்பை பணமாக்குவது நிறுத்தம் மற்றும் பொதுவைப்பு நிதிக்கு வட்டி விழுக்காடு குறைப்பு என உத்தரவுகளை வாரி வழங்கியிருக்கிறது.

இந்திய தேசத்தில் சில மாநிலங்களில் ஊதியத்தில் குறிப்பிட்ட சதவிகிதத்தை பிடித்தம் செய்திட உத்திரவிட்டது போலவே அண்டை மாநிலமான கேரளா மாநிலம் மாதத்திற்கு ஆறுநாள் வீதம் 5 மாதங் களுக்கு ஊதியத்தை பிடிக்க உத்திரவிட்டதை எதிர்த்து நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தொழிலாளர்களுக்கு சாதகமாக உத்திரவாகி இருந்தாலும், கேரள மாநில அரசாங்கம் சட்டமியற்றி, ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளதை அமுல்படுத்திட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய அரசு பணியாளர்கள் 45 லட்சத்திற்கு மேற்பட்டோரும், முன்னாள் இராணுவத்தினர் அடங்கிய 65 லட்சத்திற்கு மேற்பட்ட ஓய்வூதியர்களும் 18 மாதத்திற்கான அகவிலைப்படி நிறுத்தி வைப்பதால் பாதிக்கப்படுவர்.

தமிழகத்தில் அரசு பணியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், காவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்களென 20 லட்சத்திற்கு மேற்பட்டோர் பாதிக்கப்படுவர்.

ஈட்டிய விடுப்பு பணமாக்குவதில் மத்திய அரசு பணியாளர்கள் 45 லட்சம் பேர் பாதிப்படைவது போல தமிழக அரசுப் பணியாளர்கள் 12 லட்சம் பேர் பாதிக்கப்படுவர்.

தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் அரசாணை நீட்டிக்கப்பட்டால் மின்சாரவாரியத்தில் 85000 பேர் அகவிலைப்படி நிறுத்தம் மற்றும் ஈட்டிய விடுப்பு பணமாக்குவதில் பாதிக்கப்படுவர்.

இலட்சத்திற்குட்பட்ட ஓய்வூதியர்களும் குடும்ப ஓய்வூதியர்களும் அகவிலைப்படி 18 மாதம் நிறுத்தி வைப்பால் பாதிக்கப்படுவர்.

பொதுவைப்பு நிதி வட்டி 0.8 விழுக்காடு குறைத்துள்ளதும் பெரும் பாதிப்பை உண்டாக்கும்.

குறிப்பாக ஈட்டிய விடுப்பு பணமாக்குவதை 2003 ம் ஆண்டு தமிழ்நாடு அரசு நிறுத்தி வைக்க முயன்றபோது, மின்சார வாரியத்தில் நீட்டிக்க முயன்றபோது தொழிற்தாவா பாதுகாப்பு அரணாக இருந்ததால் மின்சாரவாரியத்தால் நிறுத்த இயலவில்லை.

மின்சாரவாரியம் இப்பிரச்சினையை எப்படி அணுகப்போகிறதென பார்ப்போம்.

ஒரு விஷயத்தை நாம் கவனமாக பார்க்க வேண்டும். இதே இந்திய தேசத்தில்தான் ஒடிசா மாநிலம் உள்ளது, அம்மாநிலத்தில் மருத்துவர்கள், செவிலியர்கள், காவலர்கள் என அனைவருக்கும் 4 மாத ஊதியம் முன்னதாக தந்து கொரோனா தடுப்பு பணியை மேற்கொள்ள சொல்கிறார்கள்.

ஆனால் தமிழகத்திலோ மருத்துவர், செவிலியர், காவலர் அனைவருக்கும் அகவிலைப்படியை நிறுத்துவதும் ஈட்டிய விடுப்பை பணமாக்க தடுப்பதும் நடக்கிறது.

இந்தியத்திரு நாட்டில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 1.4 லட்சம் கோடி வரி செலுத்துவதில் சலுகை, 7.70 லட்சம் கோடி கடன் தள்ளுபடி, இதற்கு பலனாக 100, 150, 500, 1000, 1500 கோடி என சில முதலீட்டாளர்கள் பிரதமர் நிவாரண நிதி அளித்துள்ளனர் என்பது வரலாற்று செய்தியாகயிருக்கிறது.

மத்திய மாநில அரசு பணியாளர்கள் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுவோர் யாவரும் ஒருநாள் ஊதியம் அளித்ததற்கு பிரதி பலனாக 18 மாத அகவிலைப்படி அம்பேல், ஈட்டிய விடுப்பு பணமாக்குவது முடக்கம் மற்றும் 0.8 விழுக்காடு வட்டி குறைத்து பொதுவைப்புநிதி குறைப்பு என புதிய வரலாறு படைத்திருக்கிறது மத்திய மாநில அரசுகள். குறிப்பாக மத்திய அரசு முதலாளிகளின் நலம் பேணும் முதலாளிதத்துவ அரசாக திகழ்கிறது.

தொழிலாளர் நல சட்டங்கள் 44 ஐ நான்காக குறைக்க எடுத்த முயற்சியே மத்திய அரசு தொழிலாளர் விரோத போக்கை கையாள்கிறது என்பது தெளிவாகிறது.

2020 ஜனவரி 8ம் தேதி தேசம் முழுவதும் நடைபெற்ற 24 மணி நேர வேலை நிறுத்தத்தின் எதிரொலியாக நாம் பணியாற்றும் மின்சாரத்தொழிலினை குலைக்க எடுத்த நடவடிக்கை சற்றே நின்றிருந்தாலும் மீண்டும் தலைதூக்க தொடங்கியிருக்கிறது.

மின்சார சட்டம் 2003ஐ மின்சார சட்ட திருத்த 2020 கொண்டு வர கருத்து கேட்டு மத்திய மின்துறை அமைச்சகம் அனுப்பிய கடிதம், கொரோனா உச்சமாக நாட்டை தாக்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் மத்திய அரசினுடைய இந்த விந்தையான செயல் வீடு பற்றி எரியும்போது புகைப்பதற்கு நெருப்பு கேட்பது போல அமைந்துள்ளது.

பலதரப்பிலும் நாம் உட்பட எதிர்ப்பினை பதிவு செய்த பின்னர் ஜூன் 5ம் தேதிக்கு ஒத்தி வைத்துள்ளது மத்திய அரசு.

இத்திருத்தம் அமலுக்கு வந்தால் விநியோகத்தை மேலும் பல கம்பெனிகளாக பிரித்து தனியாருக்கு தாரை வார்ப்பர்.

தனியார் உற்பத்திக்கும் விநியோகத்திற்கும் வழிவகுக்கும்.

மின்கட்டணம் உயரும், இலவச மின்இணைப்பு விவசாயத்திற்கு கிடைக்காது.

நகரத்திற்கும் கிராமத்திற்கும் மின் இணைப்பு பெறுவதிலும் மின் கட்டணத்திலும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கும்.

பணிக்காலியிடங்கள் நிரப்பாது ஒழிக்கப்பட்டு ஒப்பந்த முறை பணிகள் மேலோங்கும்.

நமது மின் உற்பத்தி நிலையங்களை படிப்படியாக மூடுவார்கள்.

தொழிற்சங்க செயல்பாடுகளை முடக்க முனைவார்கள்.

சலுகைகளை பறிப்பார்கள்.

ஏகபோக உரிமை தனியார் முதலாளிகளின் கரங்களுக்கு செல்லும் அபாயம் ஏற்படும்.

மின்சார சட்டம் 2003, மின்சார கொள்கை 2005 மத்திய மாநில ஒழுங்கு முறை ஆணையங்கள் உள்ள நேரத்தில் பாதிப்புகளோடு விளிம்பில் நின்று பணியாற்றுகிறோம்.

காலியிடங்களை பூர்த்தி செய்வதில் தாமதம்.

பதவி உயர்வு அளிப்பதில் நீதி மன்ற உத்தரவுகளை மதிக்க தவறுதல்.

வாரிய விதிமுறைகளை தன்னிச்சையாக மாற்றுதல் உயர்மட்ட அதிகாரிகளின் விருப்பத்திற்கேற்ப பதவிகளை ஒழித்தல் போன்ற நிலைகள் ஒருபுறம்.

ஆறுமாத காலத்திற்கு மேலாக பணப்பயண்கள் பட்டுவாடா இல்லாத நிலை.

வாரிசுக்கு வேலை வழங்குவதில் நீதிமன்ற உத்தரவுகளை அமல்படுத்தாமல் புறக்கணிப்பது.

ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த தொடர் முயற்சி எடுத்தும் புறக்கணிப்பையே கொள்கையாக கொண்டிருப்பதால், பலனளிக்காத நிலையென தொடரும்போது மேற்சொன்ன மின்சார சட்ட திருத்தம் 2020 நடைமுறைக்கு வந்தால் என்ன ஆகுமென பாருங்கள்.

கொரோனா நோய்தொற்று காலத்தில் அத்தியாவசிய பணியை மேற்கொண்ட திருச்சி, தஞ்சாவூர், காஞ்சிபுரம் மின்திட்டங்களில் விபத்தில் பாதிக்கப்பட்டு உயிரிழந்த தோழர்களுக்கு வீர வணக்கம் செலுத்திடுவோம்.

கொரோனா தாக்குதல் உள்ள நேரத்தில் அத்தியாவசிய பணியை மட்டும் மேற்கொள்ள வாரியம் உத்தரவிட்டும் தேனி மின்வட்டத்தில் ஈ.இங்கி பணிகளெல்லாம் செய்யசொல்லி பணிசெய்திருக்கிறார்கள்.

நிரந்தர தொழிலாளர்களும் ஒப்பந்த தொழிலாளர்களும் சமூக இடைவெளியின்றி பழனிச்செட்டி என்ற மின்பிரிவு அலுவலகத்திற்குட்பட்ட மில் ஒன்றில் பணி செய்திருக்கிறார்கள்.

மேற்பார்வை பொறியாளர் கவனத்திற்கு கொண்டு சென்றால் யூனியனுக்கு வேறு வேலை இல்லையா என்பது போல அதிகாரத்தை பயன்படுத்தி பேசியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது போன்ற செயல்களெல்லாம் ஆரோக்கியமானதாகாது என்பது மட்டுமல்ல; தொழிலாளர் களைப் பற்றி கவலை கொள்ளாத நிர்வாகமாக மாறி வருகிறது என்பதற்கு உதாரணமாகிறது.

மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை ரூ. 380/- ஊதியத்திற்கு பணிக்கமர்த்த கோரினால் அதைக் கண்டுகொள்ளாமல் இருந்துகொண்டு திடீரென வாரியத்தில் காலியாக உள்ள பதவிகளை ஓய்வு பெற்றவர்களைக் கொண்டு நிரப்பிடவும் உதவியாளர் முதல் செயற்பொறியாளர் வரை 300 மற்றும் 400 ரூபாய் தினக்கூலிக்கு ஆள் சேர்க்க வாரியம் உத்தரவிட்டு கேலிக்குரியதாக ஆக்கியுள்ளது .

இப்படிபட்ட நிலைகள் தொடருமானால் பெற்ற உரிமைகளை பாதுகாக்க முடியுமா? மேலும் உரிமையைப் பெற முடியுமா? என்ற அச்சம் மேலோங்குகிறது.

வழக்கமாக உற்சாகமாக கொண்டாடும் மேதினத்தில் தியாகிகளுக்கு அஞ்சலியும் வணக்கமும் செலுத்தி கொடியேற்றி நமது கோரிக்கைகளையும் முழங்கி ஊர்வலம் பொதுக்கூட்டமென சிறப்பாக நடப்பது போல இவ்வாண்டில் நடத்திட இயலாததால் சமூக இடைவெளி பின்பற்றி பிரிவுகள் தோறும் ஓரிருவர் சென்று கொடியேற்றி மேதினத்தைக் கடைபிடிப்போம்.

- **வாரியத்தின் நடவடிக்கைகளில் மாற்றம் கொண்டு வர**
- **மத்திய மாநில அரசுகளின் தொழிலாளர் விரோத போக்கை முறியடித்திட**
- **காலியிடங்களை நிரப்பிட**
- **ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரம் பெற்றிட**
- **மின்சார சட்ட திருத்தம் 2020 ஐ திரும்பெற வைத்திட**
- **மின்சாரவாரியத்தை பொதுத்துறையிலேயே பாதுகாத்திட**
- **தொழிற்சங்க அங்கீகாரம் தொழிலாளர்கள் தரும் அங்கீகாரம் என்பதை நிருபித்திட**
- **ஓரணியில் ஒன்றுபடுவோம் உரிமைக்கு குரல்கொடுப்போம்**

அனைவருக்கும் புரட்சிகரமான மேதின வாழ்த்துகள்.

வாழ்த்துகளுடன்,

**(அ. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

**வேலை பகிர்வு ஒப்பந்தத்தில் வராத பகுதிகளுக்கு வேலைத் தன்மை மற்றும் பதவிகள் குறித்து அமைக்கப்பட்ட குழு**

## TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED
## (ABSTRACT)

TANGEDCO - Review the Staff pattern in Non-workload areas like Expenditure side, Secretariat Branch, Administrative Branch, Accounts Branch, Audit Branch and Technical Branch in Head Quarters offices and TANTRANSCO offices (110 KV, 230 KV, 400 KV Substations etc.,) - Constitution of Committee - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per.) CMD TANGEDCO Proceedings No. 78, Dated : 05.05.2020**

Chithirai 22,
Sarvari Varudam,
Thiruvalluvar Aandu 2051

**Read :-**

*i) (Per.) CMD TANGEDCO Proceedings No. 145, (SB) Dated 06.06.2017.*
*ii) (Per.) CMD TANGEDCO Proceedings No. 224, (SB) Dated 07.12.2019*

*****

**PROCEEDINGS :-**

In the Board's Proceedings first read above orders were issued for constitution of Committee to demarcate the No. of employees in the Non-Work load areas like Expenditure side and Administrative Sections in Distribution Circles, Generation Circles and Project Staff in Central offices.

2. In the Board's Proceedings second read above orders were issued for constitution of Wage Revision Committee to negotiate with the unions on the Revision of Pay Matrix, Work allocations and Staff pattern to be effective from 01.12.2019.

3. The Wage Revision Committee has suggested to review the staff pattern in Non-work areas like Expenditure side, Secretariat Branch, Administrative Branch, Accounts Branch, Audit Branch and Technical Branch in Head Quarters offices and TANTRANSCO offices (110 KV, 230 KV, 400 KV Substations etc.,).

4. Accordingly, it has been decided to constitute a committee to review the staff pattern in Non-work areas like Expenditure side, Secretariat Branch, Adminsitrative Branch, Accounts Branch, Audit Branch and Technical Branch in Head Quarters offices and TANTRANSCO offices (110 KV, 230 KV, 400 KV Substations etc.,) with the following members :-

**I. HEAD QUARTERS / TANGEDCO**

**For Technical Branch :-**

1. Chief Engineer / Planning (Chairman of the Committee)
2. Chief Engineer / Information & Technology
3. Assistant Executive Engineer / ERP / Information & Technology

The above committee will study the entire branches under the control of Director / Distribution / TANGEDCO.

**For Generation Side :-**

1. Chief Engineer / Private Power Projects (Chairman of the Committee)
2. Superintending Engineer / Gas Turbine Schemes

The above committee will study the entire branches under the control of Director / Generation / TANGEDCO.

**For Civil Side :**

1. Executive Engineer / Civil - II

The above committee will study the entire civil areas under the control of Director / Generation / TANGEDCO.

**For Project Side :-**

1. Chief Engineer / Projects - II (Chairman of the Committee)
2. Superintending Engineer / Civil

The above committee will study the entire branches under the control of Director / Projects / TANGEDCO.

**For Secretariat Branch :-**

1. Deputy Secretary / TANTANSCO (Chairman of the Committee)
2. Under Secretary/O&M-I
3. Section Officer (A-8 Section)

The above committee will study the entire sections of Secretariat Branch.

**For Administrative Branch :-**

1. Chief Engineer / Personnel (Chairman of the Committee)
2. Senior Personnel Officer / Recruitment

The above committee will study the entire sections of Administrative Branch.

**For Accounts Branch :-**

1. Chief Financial Controller / General (Chairman of the Committee)
2. Financial Controller / General
3. Deputy Financial Controller / Funds

The above committee will study the entire sections under the control of Director / Finance / TANGEDCO.

**For Audit Branch :-**

1. Chief Internal Audit Officer (Chairman of the Committee)
2. Deputy Chief Internal Audit Officer / Pension

The above committee will study the entire sections of Audit Branch.

## II. TANTRANSCO OFFICES :

**For Operations Side :-**

1. Chief Engineer / Grid Operation (Chairman of the Committee)
2. Superintending Enginer / Operation / Korattur
3. Executive Engineer / Operation / Pasumalai

The above committee will study the entire branches under the control of Director / Operation / TANTRANSCO.

**For Transmission side (Field Office) :-**

1. Chief Engineer / Transmission Project / Trichy (Chairman of the Committee)
2. Superintending Engineer / GCC / Coimbatore

The above committee will study the entire field offices under the control of Director / Transmission Project / TANTRANSCO.

**For Transmission and P & C Office / TANTRANSCO :-**

1. Superintending Engineer / Transmission - III (Chairman of the Committee)
2. Executive Engineer / Protection and Communication / Chennai

The above committee will study the entire sections under the control of Director / Transmission Project / TANTRANSCO.

**For Accounts Side / TANTRANSCO :-**

1. Financial Controller / Finance & Accounts (Chairman of the Committee)
2. Financial Controller / Revenue & Purchase

The above committee will study the entire sections under the control of Director / Finance / TANTRANSCO.

**For Audit Side / TANTRANSCO :-**

1. Senior Deputy Chief Internal Audit Officer / TANTRANSCO

The above committee will study the entire sections under the control of Director / FInance / TANTRANSCO.

5. The Non-Work load Committee will study in depth of No. of employees required in the Expenditure side, Secretariat Branch, Administrative Branch, Accounts Branch, Audit Branch and Technical Branch in Head Quarters offices and TANTRANSCO offices (110 KV, 230 KV, 400 KV Substations etc.,) and to suggest its recommendations. The said committee will submit its report on 30.06.2020.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**S. VINEETH**
**SECRETARY (A/c)**

## விவசாய மின் இணைப்பு தொடர்பான - அரசாணையை நீட்டித்து மின்சார வாரியத்தின் உத்தரவு

(TECHNICAL BRANCH)

Office of the Director (Distribution)
TANGEDCO

**Memo. No. SE/RE&I(D)/EE/RE/A1/F.Agri addl. load/D.188/20, dt. 13.05.2020.**

***Sub : TANGEDCO - Agriculture service connection - effecting new additional load - under Tatkal new additional load scheme - GO issued from GOTN - implementation instruction issued - Reg.***

***Ref : G.O. (Ms) No. 19, Energy (C1) Department dt. 11.05.20.***

****

The government of Tamilnadu has issued orders vide ref cited for a new scheme called **"Tatkal New Additional Load Scheme"** for effecting new additional loads in the existing agriculture service connections.

IN this regard, for effective implementation of the above scheme, the following instructions are hereby issued.

1. This scheme is to be called as **"Tatkal New Additional Load Scheme - Piolot Scheme 20-21".**

2. This scheme is for willing existing agriculture consumers who apply for new additional load upto a maximum of 15 HP including the sanctioned load (Already sanctioned load + additional load now proposed should not exceed 15 HP) provided the Distribution Transformer has adequate spare load capacity to effect the additional load. Sanctioned load only is to be taken into account for assessment of spare capacity of the DT.

3. Diversity factor of 1 is to be maintained at all times for calculation of loading of transformer.

4. The willingness from the consumer duly mentioning the sanctioned load, additional load required with aggregate load not exceeding 15 HP including the sanctioned load, whether involving name transfer and acceptance to pay the prescribed one time charges within 30 days shall be obtained.

5. The willingness letter from the consumer is to be received at Division office upto 30.06.2020 only.

6. Willingness letter from the existing agriculture consumer should be entered in a separate register with a senioirty number in the Executive Engineer / O & M office. The consumer should sing in the register and acknowledgement for having received the willingness letter should be given to the consumer duly mentioning the seniority number. This priority should be maintained for assessing the adequacy of DT capacity.

7. The received willingness letter should be forwarded to the concerned Section Officer for assessing the availablility of the spare load capacity of the concerned Distribution Transformer strictly as per received willingness seniority. The load adequacy of the DT is to be personally verified by the concerned Section Officer and should be duly counter checked by the AEE concerned, only based on the sanctioned load as on 11.05.2020. Whether the spare capacity to accommodate the additional load is adequate / not adequate is to be jointly reported by AEE & AE to the EE / O & M within a week on receipt of the intimation from the concerned EE / O&M.

8. Based on the field report, if the Distribution Transformer is having adequate load capacity to accommodate the additional load requested by the consumer, then the EE / O&M will address the consumer within a week, requesting him to report with the details in 10(a) (or) 10(b).

9. All intimations to be consumer should be sent through registered post with acknowledgement.

10. EE/O & M shall intimate therein clearly to the consumer that the following are the requirements for registration of the additional load application, entering motor and capacitor readness within 30 days from the date of receipt of intimation letter.

a) For cases involving no name transfer : (Consumer is to report to Section Officer directly).

(1) Form for agriculture service connection application in Form 2 without VAO certification shall be obtained.

(2) Rs. 100/- towards Registration cum processing charges + Rs. 18/- towards GST.

(3) One time charges @ Rs. 20,000/HP or part thereof of the additional load.

b) For cases involving name transfer : (consumer is to report to EE / O &M0

(1) Necessary name transfer is to be compelted first by EE / O&M and should be intimated to concerned Section Officer.

(2) Form for agriculture service connection application in Form 2 without VAO certification shall be obtained.

(3) Rs. 100/- towards Registration cum processing charges + Rs. 18/- towards GST.

(4) One time charges @ Rs. 20,000/HP or part thereof of the additional load.

c) No other documents shall be insisted.

11. All the above mentioned amounts should be paid in one time by the consumer at the concerned section office. After that the date of payment will be the seniority for effecting additional load.

12. The section officer after due scrutiny of documents mentioned in 10 (a & b) shall register the additional load application as mentioned in para 11 and accept the motor and capacitor readiness.

13. The additional load shall be effected duly observing the procedure in vogue as per the seniority given in para 11. Lapses found, if any, will be viewed seriously.

14. In cases where adequate load capacity is not available, the consumer may be informed accordingly within a week by EE / O & M.

15. The Regional Chief Engineer / Distribution shall give wide publicity, implement and monitor the **"Tatkal New Additional load scheme - pilot scheme-20-21"** and send the progress report to CE/Planning & RC every fortnight.

16. The scheme amount to be collected under Account Code No. : 55-109.

17. The above guidelines shall be adhered to scrupulously at all levels.

18. The receipt of this memo shall be acknowledge to the Chief Engineer / Planning & RC in the first instance.

**(BY THE ORDER OF THE CHAIRMAN AND MANAGING DIRECTOR)**

**CHIEF ENGINEER / PLANNING & RC**
for **DIRECTOR (DISTRIBUTION)**

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **"எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்"**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : **9841446621 ❖ tnebemployeesfederation3600@gmail.com**

**குறிப்பு :** செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.

## ஓய்வு வயது 49 ஆக உயர்த்தி அரசு அறிவித்ததை நடைமுறைப்படுத்து முன் பேச்சு வார்த்தை நடத்திடக் கோரி நமது பெடரேஷனின் கடிதம்

பெறுநர்: நாள் : 08.05.2020

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள்** : **தமிழக அரசு ஆணை - ஓய்வு பெறும் வயது 58லிருந்து 59ஆக நீட்டிப்பு - தொடர்பாக...**

**பார்வை** :
1. **G.O.(Ms) No. 51 Dt. 07.05.2020**
2. **Proceedings of the certifying Officer - Madras - 4. Present Thiru N. Shanmugasundram, B.A.B.L., D.S., B3/19955/75 Dated 16.6.77**
3. **Writ petion Nos. 1463, 1530, 1763 of 1966**
4. ***1969 ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 23 ம் நாள் தொழிலாளர் நீதி மன்றம் சென்னை (மற்றும்) 1946 ம் ஆண்டு தொழில் சம்மந்தமான வேலை வாய்ப்பு (நிலை ஆணைகளின்) கீழ் மேல் முறையீட்டு அதிகாரி சான்றளிக்கப்பட்ட நிலை ஆணையில் வ.எண்.27.***

பார்வை (1)ல் கண்டுள்ளபடி தமிழக அரசு, அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்களுக்கும் ஓய்வு பெறும் வயதை 58லிருந்து 59ஆக மாற்றி உத்தரவிட்டுள்ளதில் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் பொருந்தும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இது தொடர்பான உத்தரவிடுவதற்கு முன்னர் 1947 தொழிற் தாவா சட்டபடி 9A நோட்டீஸ் தந்து தொழிற்சங்கங்களோடு கலந்து பேசி முடிவெடுத்திட வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்வதோடு பார்வை (2) உள்ளது தொடர்பான விபரங்களை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

Standing Order நிலையான விதிகள் அடிப்படையாக கொண்டு இயங்கும் பொதுத் துறை நிறுவனங்களில் ஓய்வு பெறுவதற்கான வயது நிர்ணயிக்கப்பட்டு பணியாற்றுவோர் அரசு ஊழியருக்கு இணையாக கருத முடியாது என்று குறிப்பிட்டுள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

"The industrial workmen cannot be equated to Government servants and the latter have got special provisions governing their services in the constitution of India"

எனவே தமிழக அரசின் அரசாணையை அமல்படுத்தி ஓய்வு வயதை நீட்டிக்கும் முன் தொழிற் சங்கங்களோடு கலந்து பேசி கருத்தறிய 9A நோட்டீஸ் வழங்குவதே சரியான நடைமுறையாக அமையும் என்பதை தங்களின் கவனத்திற்கு மீண்டும் தெரிவித்துக்கொள்வதோடு பார்வை (3)ல் குறிப்பிட்ட நீதி மன்ற வழக்குகளின் முடிவுகளும் நிலையானையை உறுதிப்படுத்தி தீர்ப்பாகியுள்ளது

எனவே வாரியத்தின் நிலையானை விதிகளில் எம்மாற்றம் கொண்டு வருவதாகினும் தொழிற் சங்கங்களோடு கலந்து பேசி முடிவெடுக்க வேண்டும் என்பதால் அரசு அறிவித்துள்ள ஓய்வு வயது 58 லிருந்து 59 என நீட்டிப்பை தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அமல்படுத்தும் முன் மேற்கண்ட உரிய மேல்நடவடிக்கையை எதிர்பார்க்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## இளநிலை பொறியாளர் 2ம் நிலையிலிருந்து பதவி உயர்வு குறித்து புதிய வரைமுறை நிர்ணயிக்க தொழிற்சங்கங்கள் கூட்டுக் குழுவின் சார்பில் கடிதம்

### தமிழ்நாடு மின்வாரிய அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு

நாள் : 11.05.2020

பெறுதல் :

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்** அவர்கள்,
TNEB Ltd & TANGEDCO, சென்னை - 2.

ஐயா,

**பொருள் : இளநிலை பொறியாளர் மின்னியல் - இரண்டாம் நிலை - உத்தேச முதன்மை பட்டியல் வெளியீடு - வாரிய பணி விதியின் படி நிர்ணயம் செய்யப்படாதது - நீதிமன்ற தீர்ப்பையும் பொருட்படுத்தாதது - அனைத்து தொழிற்சங்கங்களும் கூட்டாக கொள்கை ரீதியான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது கவனத்தில் கொள்ளாமை - இறுதி முதன்மைப் பட்டியல் வெளியிட்டுள்ளது - இளநிலை பொறியாளர் மின்னியல் - முதல் நிலை பதவிக்கு தகுதி அறிக்கை கேட்கப்பட்டு பதவி உயர்வு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது - மூத்த தொழிலாளர்கள் மத்தியில் கடும் அதிருப்தி - தொழிற்சங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு கொள்கை முடிவு எடுத்த பின்பு முதன்மை நிர்ணயம் செய்யவும் நீதிமன்றத்தின் ஒப்புதல் பெற்ற பிறகு இளநிலைப் பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வு வழங்கிடவும் நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்வது தொடர்பாக...**

**பார்வை :**

1. W.P.(MD) No. 20714 of 2015 - Order Dated 25.07.17
2. W.A.(MD) No. 1227 of 2018 - Order Dated 02.07.19.
3. CE/P's Memo No. 098488/4114(A)/G-12/G-122/2018-4 dt. 19.10.2019 (393 Nos.)
4. CE/P's Memo No. 098488/4114(A)/G-12/G-122/2018-4 dt. 19.10.2019 (1364 Nos.)
5. CE/P's Lr. No. 075171/191/G-1/G-1(2)/2019-5, dt. 16.11.2019 (Suitability rep called)
6. மின்வாரிய அனைத்து சங்க கூட்டமைப்பு கடித நாள் : 03.02.2020
7. CE/P's Memo No. 024900/722/G.12/G.122/2020, dt. 08.04.2020

*****

**தலைவர் அவர்களின் கனிவான பரிசீலனைக்கு, வணக்கம்.**

இளநிலை பொறியாளர் மின்னியல் இரண்டாம் நிலை பதவியில் இருந்து இளநிலை பொறியாளர் மின்னியல் முதல் நிலை பதவிக்கு பதவி உயர்வு வழங்குவது மற்றும் துன்மை நிர்ணயம் குறித்து தொடரப்பட்ட வழக்கில் பார்வை 1-ல் குறிப்பிட்ட உயர்நீதிமன்ற உத்திரவில்

பாரா 11-ல் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

It is an admitted case that the post of JE-Gr-I is a promotional post from the feeder category of Junior Engineer Grade - II, Which has already been filed up in the ratio of 3:1 between the diploma holders and non-diploma holders. It is also an admitted case that the ratio of 3:1 is not applicable for further promotion to the post of Junior Engineer Grade-I. But the date of appointment in the feeder category of Junior Engineer Grade - II will be the crucial date to be taken into account by the first respondent at the time of preparing the common seniority list among the Junior Engineer Grade - II for further promotion from the post of Junior Engineer Grade - II to the post of Junior Engineer Grade - I.

இந்த நீதிமன்ற உத்திரவை ரத்து செய்திட வேண்டும் என்று டிப்ளமோ படித்தவர்கள் சார்பில் மதுரை உயர்நீதிமன்ற டிவிசன் பெஞ்சில் மேல்முறையீடு செய்யப்பட்டு அவ்வழக்கும் கடந்த 02.07.2019 அன்று விசாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட தீர்ப்பில் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டதோடு நான்கு வார காலத்திற்குள் புதிதாக உத்தேச முதன்மைப் பட்டியல் வெளியிட்டு பாதிக்கப்பட்டவர்களிடம் ஆட்சேபனைகளை பெற்று மேற்கண்ட தீர்ப்பின் அடிப்படையில் பரிசீலித்து இறுதி முதன்மைப் பட்டியல் வெளியிடுமாறு உத்திரவிட்டது.

இதன் அடிப்படையில் பார்வை 3-ன் படி 393 நபர்களுக்கும் பார்வை 4-ன் படி 1364 நபர்களுக்கும் உத்தேச முதன்மைப் பட்டியல் மின்வாரிய நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது. இதில் டிப்ளோ மற்றும் டிப்ளமோ அல்லாதவர்களை 3:1 என்ற விகிதாச்சாரத்தில் வைத்து நிர்ணயம் செய்யப்படுவதாக கூறி வெளியிடப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் குருசியல் தேதியை அடிப்படையாக வைத்து தகுதி அறிக்கை கோரும் பொழுது வாரிய பணி விதிகளின்படி இரண்டு ஆண்டுகள் அனுபவம் இல்லாத நிலையில் JE-II Gr - ஆக தேர்வு செய்யப்படாத டிப்ளமோ படித்தவர்களை பின்தேதியில் பணிவிதிகளின் படி தகுதி பெற்று தேர்வு செய்யப்பட்டவர்களை முதன்மையில் முன்னால் பொருத்தியும், வாரிய பணி விதிகளின்படி ஆறு ஆண்டுகள் பணி அனுபவத்துடன் தகுதியுள்ளவராக 2009 - ஆண்டே JE - Gr. II - ஆக தேர்வு செய்யப்பட்ட டிப்ளமோ அல்லாதவர்களை முதன்மையில் பின்னால் பொருத்துவது என்பது ஏற்புடையதாக இல்லை என்பதோடு, மேற்கண்ட நீதிமன்ற உத்திரவையும் மீறிய செயலாகவே கருதுகிறோம்.

**டிப்ளோ அல்லது டிப்ளமோ அல்லாதவர்களுக்கென்று தனித்தனி முதன்மைப் பட்டியல் இல்லாத நிலையில் இவ்வாறு முதன்மை பொருத்தம் (Inter-se-Seniority) செய்துள்ளது வாரிய பணி விதி எண் 97, 98-ற்கு எதிராக உள்ளது.**

இந்நிலையில் பார்வை - 5ன் படி இளநிலைப் பொறியாளர் முதல் நிலைப் பதவிக்கு தகுதி அறிக்கையும் இதே முதன்மைப் பட்டியலை வைத்து கேட்கப்பட்டது.

இந்நிலையில் இவ்விசயம் குறித்து முதன்மை பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக ஆட்சேபனைக் கடிதங்களையும் தலைமைப் பொறியாளர் பணியமைப்பு அவர்களுக்கு அனுப்பி வைத்து வைத்து உள்ளனர். அதேபோல அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகளும் கலந்து பேசி இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை பணியாளர்களுக்கான முதன்மை நிர்ணயம் குறித்து வாரியம்

எடுத்துள்ள முடிவுகள் வாரிய விதிகளுக்கும் உயர்நீதிமன்ற உத்திரவிற்கும் முரணாக இருப்பதை சுட்டிக்காட்டி கடந்த 03.02.2020 அன்று பார்வை 5-ல் கண்ட கடிதம் வாயிலாக தங்களிடம் வலியுறுத்தப்பட்டது. அப்பொழுது தாங்களும் ஒவ்வொரு ஆண்டையும் கணக்கில் கொண்டுதான் முதன்மை நிர்ணயம் செய்வதே சரியானது என்றும், ஆனால் மின்வாரியத்தில் கடந்த காலத்தில் இப்படித்தான் முதன்மை நிர்ணயம் செய்து வருவதை நடைமுறைப் பழக்கமாக உள்ளது என்றும், எனவே நீதிமன்றத்தின் மூலம் தீர்ப்பு வந்தால் அதனடிப்படையில் முதன்மை மாற்றியமைக்கப் படும் என்று தெரிவித்தீர்கள்.

அப்பொழுது அனைத்து தொழிற்சங்கத் தலைவர்களும் நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை தேர்வுப் பட்டியல் ஒப்புதல் அளிப்பதை நிறுத்தி வைத்திட கேட்டுக் கொண்டதை தாங்களும் ஏற்றுக் கொண்டீர்கள். ஆனால் தற்போது தேர்வுப் பட்டியல் ஒப்புதல் அளிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக செய்திகள் வெளியாகி உள்ளதாலும், பார்வை 7-ன் படி கூடுதலாக 1748 பேர்களுக்கு கடந்த கால நடைமுறைப்படி முதன்மைப் பட்டியல் வெளியிட்டதிலும், 2014-ஆம் ஆண்டில் தொழில்நுட்ப உதவியாளராக பணியில் சேர்ந்து, 2018-ம் ஆண்டில் இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலையாக பதவி உயர்வு பெற்றவர்களின் முதன்மைக்குப் பின்னால் 2009, 2010-ம் ஆண்டுகளிலேயே இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலையாக பதவி உயர்வு பெற்றவர்களை முதன்மை நிர்ணயம் செய்து வெளியிட்டுள்ளது குழந்தை பிறப்பதற்கு முன்பே பாகம் பிரித்து வைத்த கதையாக வாரியம் செயல்பட்டுள்ளதையே இது காட்டுகிறது.

மேலும் பல ஆண்டுகளாக 110 கே.வி. துணை மின் நிலைய முறைப்பணி பார்க்க ஆட்கள் இல்லாமல் ஆயிரக்கணக்கான காலியிடங்கள் இருந்த போதிலும், வேலைப்பளு ஒப்பந்தத்திற்கு அப்பாற்பட்டு அர்பணிப்பு உணர்வோடு பணியாற்றி வரும் மூத்த தொழிலாளர்கள் மத்தியில் கொந்தளிப்பான மனநிலை ஏற்பட்டுள்ளது.

எனவே **தலைவர் அவர்கள் இவ்விஷயத்தில் சிறப்பு கவனம் செலுத்தி இப்பிரச்சனையை சுமூகமாக முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் கீழ்க்கண்ட ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.**

1) JE-II-Gr. பதவிக்கு பதவி உயர்வு வழங்கிட3:1 என்கிற விகிதாச்சாரத்தின்படி தேர்வு செய்யப்பட வேண்டும் என்று பணிவிதியில் கூறப்பட்டுள்ளதே தவிர முதன்மைப் பொருத்தம் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்று வாரிய பணிவிதியில் இல்லை என்ற நிலையில், நடைமுறைப் பழக்கத்தின் அடிப்படையில் முதன்மை நிர்ணயம் செய்வதாக வாரியம் கூறுவது சட்டப்படி ஏற்புடைய கருத்தாக இல்லை. பணிவிதியில் குறிப்பிடப்படவில்லை என்ற நிலையில் ஒரு கொள்கை முடிவு எடுத்திட வேண்டும் என்றால் நிர்வாகம் அனைத்து தொழிற்சங்கங்களிடம் உடனடியாக அழைத்துப் பேசியோ அல்லது எழுத்துப்பூர்வமாக கருத்துக்களை பெற்றோ அதன்படி ஒரு கொள்கை முடிவை எடுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

2) மின்வாரியத்தில் கடந்த காலத்தில் பல்வேறு விஷயங்கள் நீதிமன்றத்தில் வழக்குகளாக நிலுவையில் இருந்த நிலையில் அவ்விசயம் குறித்து மின்வாரியத் தொழிற் சங்கங்களிடையே பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் காணப்பட்டு அவற்றை நீதிமன்றத்தின் ஒப்புதல் பெற்று செயல்படுத்தி உள்ளதையும் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம். அதே போல இந்த விசயத்திலும் நீதிமன்றத்தில் வழக்கு இருந்தாலும் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதன் முடிவை

நீதிமன்றத்திடம் தெரிவித்து உத்திரவு பெற்று பின்னர் பணிவிதியில் சேர்த்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

3) இளநிலைப் பொறியாளர் முதல்நிலைப் பதவிகளை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட இயலாமல் 2000-த்திற்கும் மேற்பட்ட காலியிடங்கள் நிலவி வருவதால் பொதுமக்கள் சேவை கடுமையாக பாதிக்கப்படுவதாக கூறி அவசர வழக்காக விசாரித்திட உயர்நீதிமன்றத் திடம் மின்வாரிய நிர்வாகம் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

4) மேலும் இப்பிரச்சனை குறித்து ஒரு கொள்கை முடிவு எடுத்திடும் வகையில் தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி சுமூக தீர்வு கண்டு தொழில் அமைதி ஏற்படுத்திய பிறகு இளநிலைப் பொறியாளர் முதல்நிலை பதவிகளை நிரப்பிடும் நடவடிக்கைகளை எடுத்திடுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

5) வாரியம் பிரிவு அலுவலகப் பணிகள் பாதிக்கப்படுவதாக கருதி உடனடியாக இளநிலைப் பொறியாளர் முதல் நிலைப் பதவிகள் நிரப்பிட வேண்டுமென்றால் முதன்மைப் பட்டியல் குறித்த சர்ச்சைகளுக்கு பின்னால் தீர்வு காண்பதாக முடிவு செய்து விட்டு (காலியிடம் அதிகம் இருக்கின்ற காரணத்தினால்) 2015-ம் ஆண்டுவரை இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலையாக பதவி உயர்வு பெற்றுள்ள அனைத்து டிப்ளமோ மற்றும் டிப்ளமோ அல்லாதவர்களுக்கு தகுதி அறிக்கை பெற்று இறுதி செய்து பதவி உயர்வு வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

| | | | |
|---|---|---|---|
| தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம் | TNEB கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம் | தமிழ்நாடு மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம் | தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு |
| ஒப்புதலுடன்..... (T. விஜயரங்கன்) மின்சார பிரிவு அண்ணா தொழிற் சங்கம் | தமிழ்நாடு மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம் | TNEB ஐ.என்.டியு.சி. (சேவியர்) | TNEB ஐ.என்.டியு.சி. (சுவர்ணராஜ்) |
| தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் | TNEB தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம் | பாரதீய மின் ஊழியர் சம்மேளனம் | தமிழ்நாடு மின்வாரிய அட்டைப் பட்டியல் தொழிலாளர் சங்கம் |
| தமிழ்நாடு மின்வாரிய டாக்டர் அம்பேத்கார் எம்ளாயீஸ் சங்கம் | TNEB எம்பளாயீஸ் பெடரேஷன் | தமிழ்நாடு மின்வாரிய பவனர் இன்ஜினயர்ஸ் ஆர்கனைசேசன் | |

## மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு பணிகளை மேற்கொள்வதற்கான முதுநிலை நிர்வாக அலுவலர் பதவியை மீண்டும் அளித்திட கோரி நிர்வாக பணியாளர் மற்றும் அலுவலர் சங்கத்தின் கடிதம்

13.05.2020

To

1. **The Chairman - cum - Managing Director,**
   TANGEDCO, Chennai - 2.

2. **The Joint Managing Director,**
   TANGEDCO, Chennai - 2.

Respected Sir,

***SUB : Creation of new post of undersecretary relating to Secretariat Branch instead of senior administrative officer for looking after the court cases of TANGEDCO in Madurai Branch court - deviation in principles and procedure hither to adapting - retentionof the post of senior administrative officer by cancelling new post - requesting of -***

***Ref :***
***1. (Per) CMD TANGEDCO Proceedings No. 78 (Adm. Br) Dt. 23/05/2014***
***2. Memo (Per) No : 004530/38/G39/G393/2020 Dt. 25/02/2020***
***3. (Per) CMD TANGEDCO Proceedings No. 84 (SB) Dt. 08/05/2020***

In the CMD Proceedings in the reference 3 read above sanction was accorded for creation of one post of Undersecretary / court cases Madurai, under administrative control of secretariat branch for the period of one year to look after the court cases related to TANGEDCO in Madurai branch of Madras High Court by abolishing the existing one post of Senior administrative officer in the administrative cadre branch (court cases) office of CE/Madurai region last continued in the reference 2 read above. The existing senior administrative officer of administrative cadre branch is discharging the same duty of court cases relating to TANGEDCO for the past six years with the assistance of an administrative supervisor diverted from Madurai circle.

At the undesirable critical circumstances of spreading over the Corona Virus, particularly in Chennai, staying in houses with social distance of one meter and insufficient staff attending office, the sudden creation of the post of under secretary instead of existing senior administrative officer is getting suspicion over the genuineness of the creation of the post and also the deviation of principles hither to adopt in three administrative branches.

Before analysing the justification for the sudden change of post, we are furnishing the different functions of three administrative wings inTNEB, one is called "Secretariat Branch" headed by Secretary. The second one is Head Quarters Adm. Branch headed by CE/Personnel. Besides these two, the 3rd one which was formed during 1987 and named as Adm. Cadre Branch headed by respective Chief Engineers (Distn.) Thermal and superintending Engineers of all the Circles and Executive Engineers of Distribution Divisions. In Administrative field only three branches are functioning and the seniority of the staff and officers is maintained for promotion and other urpose

separately. But in respect of other "Non-Administration" (Provincial) branches state wise Seniority is maintained for the same purpose.

The 1st two branches are functioning at the headquarters premises at Chennai only. The Personnel in the secretariat and head quarters branch are having no transfer outside Chennai and they are working in Chennai itself until the retirement. Bu the Adm. Cadre Branch is functioning from Chennai to Kanyakumari at all offices of TNEB including Thermal / Project Circle / Generation / GTTP / GCC / WInd Energy throughout Tamil Nadu and this cadre Personnel are transferable to any offices in Tamil Nadu. Interchange of the post or personnel between the three branches are not permissible. This is the practice adopted by the Board till dated.

Thiru L. Gopal, Adm. Officer who is the next in the selected panel, is expecting very eagerly his promotion as Sr. Adm. Officer and allotment order against this vacant post of Madurai court cases. If he has not promoted now the remaining administrative officers in the selected list will be lapsed and they could not get promotion before July, 2021. The announcement of Tamil Nadu government for increasing the retirement age of employees from 58 to 59 is added for the lose of promotion at this stage.

We therefore request you sir to kindly consider our demand and arrange to issue orders retaining the post of Sr. Adm. Officer at Madurai, by cancelling the post of undersecretary early, so that Thiru L. Gopal is accommodated at Madurai on promotion.

Copy of the proceedings Dt: 23/05/2014 is enclosed for reference.

Thanking You.

Yours faithfuly

(General Secretary)

## மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு பணிகளை மேற்கொள்வதற்கான முதுநிலை நிர்வாக அலுவலர் பதவியை மீண்டும் அளித்திட கோரி வாரியத்திற்கு கடிதம்

நாள் : 13.05.2020

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

பொருள் : முதுநிலை நிர்வாக அலுவலர் பதவி - (Senior Administrative Officer) மதுரை மண்டலம் நீதிமன்ற அலுவலுக்கானதை ரத்து செய்துள்ளது - ஆணையை ரத்து செய்திட வேண்டுவது - தொடர்பாக...

பார்வை :
1. **(Per) CMD TANGEDCO - Proceeding No. 78 (Adm. Br) Dt. 23.05.2014**
2. **Memo (Per) No. 004530/38/G39/G393/2020 Dt. 25.02.2020**
3. **(Per) CMD TANGEDCO Proceeding No. 84 (SB) Dt. 08.05.2020**

பார்வை (1)ன் படி மதுரையில் சென்னை உயர்நீதி மன்ற கிளையில் மின்சார வாரியத்திற்குட்பட்ட வழக்குகளை கண்காணித்து உரிய நடவடிக்கை எடுத்திட முதுநிலை நிர்வாக அலுவலர் பதவி உருவாக்கப்பட்டு தொடர்ந்து சிறப்பான முறையில் வழக்கு தொடர்பான பணிகளை கவனித்து வருகின்றனர்.

பார்வை (2)ன் படி இப்பதவி தொடர்ந்திட வாரியத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் பார்வை (3)ன் படி இப்பதவியை ரத்து செய்து சார்பு செயலாளரை (Under Secretary) தொடர உத்தரவிட்டுள்ளது நிர்வாகப் பணியை மேற்கொள்வோரிடத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

முதுநிலை நிர்வாக அலுவலர் மதுரை பதவி தற்சமயம் காலியாக உள்ள நிலையில் அடுத்த பதவி உயர்வு அளிக்காததுதம் வருந்தத்தக்கதாக அமைந்துள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் நிர்வாகப் பிரிவினரில் மின் விநியோக வட்டங்கள், தொடரமைப்பு மற்றும் உற்பத்தி வட்டங்களில் தமிழ்நாடு முழுவதும் பணியாற்றும் நிர்வாக பிரிவினருக்கு கிடைக்கும் பதவி உயர்வினை தடுத்த செயலாக இது அமைந்துள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் நிர்வாக கிளையும், செயலகக் கிளையும் செயல்படுவதில் பணியாற்றுபவர்கள் யாவரும் தலைமை அலுவலகத்திலேயே பணியாற்றக் கூடியவர்கள்.

செயலகப் பிரிவில் உள்ள பதவியொன்றை மதுரை மின்விநியோக மண்டலத்திற்குட்பட்ட இடத்தில் மாற்றியமைப்பதும் செயலகப் பிரிவில் பணியாற்றுபவர்களின் மனத்திண்மையை பாதிக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேற்கண்ட எதையுமே கணக்கில் கொள்ளாமல் 1987ல் உருவாக்கப்பட்ட நிர்வாகப் பிரிவு தமிழகம் முழுவதும் சிறப்பான பணியை மேற்கொண்டு வரும் நிலையில் நிர்வாகப் பிரிவுக்கான பதவியை செயலகப் பிரிவுக்கு தன்னிச்சையாக எடுத்து செல்வது என்பது நிர்வாக ரீதியாக உகந்ததில்லை என கருதுகிறோம்.

இது குறித்து தமிழ்நாடு மின்சார வாரிய நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் சங்கம் சார்பாக தெரிவித்துள்ள ஆட்சேபணை மற்றும் கோரிக்கை அடங்கிய கடிதத்தினையும் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

எனவே தலைவர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து பார்வை (3)ன் படி ரத்து செய்துள்ள பதவியை மீண்டும் அனுமதித்து முதுநிலை நிர்வாக அலுவலர் (Senior Administrative Officer) பதவி உயர்வுக்கு தகுதிப் பட்டியலில் உள்ள திரு. L. கோபால் அவர்கட்கு பதவி உயர்வு வழங்கிட ஆவன செய்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

# 18.05.2020 அன்று தொழிற்சங்க கூட்டுக்குழு சார்பாக நடைபெற்ற கோரிக்கை ஆர்ப்பாட்டம்




































Registered with Registrar of News Papers for India RNI No. TNBIL/2018/76375 (R.Dis No. 599/2018)
Postal Registration No. TN/ARD/106/2018-2020, WPP Licence No. : TN/PMG(CCR)/WPP/607/2019-2020
Posted at Egmore RMS (Patrika Channel) Date of Publishing Second week of every month
Posted on 15 - 17th of every month - Posted on 17.05.2020

# 18.05.2020 அன்று தொழிற்சங்க கூட்டுக்குழு சார்பாக நடைபெற்ற கோரிக்கை ஆர்ப்பாட்டம்































Printed by D.Babu, Published by A.Sekkizhar on behalf of Tamil Nadu Electricity Board Employees Federation
39/101 Singanna Street, Chintadripet, Chennai 600002
and Printed at Sri Raj Cine Printers No.177/72, Singanna Street, Chintadripet, Chennai 600002.
**Editor : A. SEKKIZHAR**